Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ்Mirror www.tamilmirror.lk

FRIDAY, FEBRUARY 02, 2024

வெள்ளிக்கிழமை பெப்ரவரி 02, 2024 | ஒளி: 09 கதிர்: 185 | பக்கம்:09 | நகரப்பதிப்பு★ | FREE

## இம்மாதம் முதல் மதிய உணவு



தரம் 5க்கு கீழ் உள்ள சிறார்களின் போசாக்கு நிலையை உயர்த்தும் வகையில் மதிய உணவு வழங்கும் வேலைத்திட்டம் இம்மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

விவசாயம் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு, கல்வி அமைச்சு, சுகாதார அமைச்சு, ஜனாதிபதி செயலகம் மற்றும் உலக உணவுத் திட்டம் ஆகியன இணைந்து இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றன.

முழுச் செய்தி P12

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தால்

# “உட்கட்சி முரண்பாடுகள் வரும்”



வ.சக்தி

கூட்டத்தை ஒத்தி வைப்பது தொடர்பான அதிகாரம் பதில் பொதுச் செயலாளருக்குத்தான் உள்ளது. இது ஒரு சட்ட ரீதியான விடயமாகும் அந்த அடிப்படையில் கூட்ட தீர்மானம் என்ன என்பது தொடர்பில் அவர் தலைவருக்கு கடிதம் எழுதியுள்ளதாக நான் அறிகின்றேன். அதற்குரிய கடிதத்தையும் நான் பார்த்திருந்தேன். இந்த விடையம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துக்கள் வழங்கினால் உட்கட்சி முரண்பாடுகள் பல வரும் காரணமாக இதுதொடர்பில் மேலதிக விபரங்களை நான் தெரிவிக்க விரும்பவில்லை என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

முழுச் செய்தி P12

நிகழ்நிலைக் காப்புச்சட்டமூலம்:

## மார்ச் 12 இயக்கம் கடும் கண்டனம்

**முக்கியமான திருத்தங்களானது சட்டமூலம் நிறைவேற்றப்பட்டபோது கவனிக்கப்படவில்லை என்பதை அது வெளிப்படுத்துகின்றது**

நிகழ்நிலைக் காப்புச்சட்டமூலமானது சட்டத்திற்குப் புறம்பான முறையில் நிறைவேற்றப்பட்டதனை மார்ச் 12 இயக்கம் கடுமையாகக் கண்டித்துள்ளது. இந்த சட்டமூலம் பாராளுமன்றத்தில் 2024 ஆம் ஆண்டு ஜனவரி 24 ஆம் திகதியன்று நிறைவேற்றப்பட்டது.

இந்த நிகழ்நிலைக் காப்புச் சட்டமூலமானது இலங்கையின் அரசியலமைப்பில் இடம்பெற்றுள்ள அடிப்படை உரிமைகள் மற்றும் ஜனநாயகக் கொள்கைகளுக்கு கடுமையான அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்றது என்பதனை நாம் மீண்டும் வலியுறுத்துகின்றோம்.

முழுச் செய்தி P12

## மஹிந்த,திலங்க இராஜினாமா



ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து மஹிந்த அமரவீர மற்றும் திலங்க சுமதிபால ஆகியோர் இராஜினாமா கடிதத்தை கையளித்துள்ளனர்.

தொழிற்சங்க நடவடிக்கைகளால்

## படையினர் களமிறக்கம்



நாடளாவிய ரீதியில் 72 சுகாதார தொழிற்சங்கங்களின் வைத்தியசாலை பணியாளர்களினால் மேற்கொள்ளப்பட்டு வரும் தொழிற்சங்க நடவடிக்கைகள் வைத்தியசாலைகளின் நடவடிக்கைகள் தடையின்றி முன்னெடுப்பதற்கு தேவையான படையினர் பணியமர்த்தப்பட்டுள்ளனர். இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் விக்கும் லியனகேவின் பணிப்புரைக்கு அமைய படையினர் களமிறக்கப்பட்டுள்ளனர். மேற்கு, கிழக்கு, மத்திய மற்றும் வன்னி பாதுகாப்புப் படைத் தலைமையக தளபதிகளின் மேற்பார்வையில் கொழும்பு மற்றும் கண்டி தேசிய வைத்தியசாலைகள்,

முழுச் செய்தி P12

மதுபான சாலைகளுக்கு

## ஞாயிறு பூட்டு

நாட்டின் 76 ஆவது சுதந்திர தினமான ஞாயிறுக்கிழமை (4) நாடளாவிய ரீதியிலுள்ள சகல மதுபானசாலைகளும் மூடப்படுமென கலால் திணைக்களம் அறிவித்துள்ளது.

மறுநாள் திங்கட்கிழமை (05) சகல மதுபானசாலைகளும் திறக்கப்படுமென கலா திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் சீ.ஜே. வீரக்கொடி அறிவித்துள்ளார்.

மதுபானசாலைகள் மூடப்படும் தினத்தன்று சட்டத்தை மீறி, மதுபானங்களை விற்பனைச் செய்வோருக்கு எதிராக கடுமையான சட்டங்கள் அமுல்படுத்தப்படுமென கலால் திணைக்களம் அறிவித்துள்ளது.

அத்துடன், சட்டவிரோதமான முறையில் மதுபானங்களை விற்பனைச் செய்வோரை கைது செய்வதற்கு விசேட வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்படுமென அத்திணைக்களம் அறிவித்துள்ளது.




பாராளுமன்றத்தின் ஐந்தாவது அமர்வு

## புதனன்று திறக்கப்படும்

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் ஐந்தாவது அமர்வு எதிர்வரும் 7ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் ஆரம்பித்து வைக்கப்படும் என பாராளுமன்றத்தின் தொடர்பாடல் திணைக்களம் வியாழக்கிழமை (01) அறிவித்துள்ளது.

ஜனாதிபதி தனது கொள்கைப் பிரகடனத்தை முன்வைப்பார் என பாராளுமன்ற பிரதி செயலாளர் நாயகமும் தலைமை அதிகாரியுமான சமிந்த குலரத்ன தெரிவித்தார்.

முழுச் செய்தி P12



## “அதிகரிக்க எவ்வித ஏற்பாடும் இல்லை”

ஒரு லீற்றர் டீசலின் விலை 5 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ள போதிலும் பஸ் கட்டணத்தை அதிகரிப்பதற்கு எவ்வித ஏற்பாடும் இல்லை என தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் ஷஷி வெல்கம, வியாழக்கிழமை (1) தெரிவித்தார்.

பஸ் கட்டணம் தொடர்பில் தற்போதுள்ள சட்டங்கள் மற்றும் உடன்படிக்கைகளின் பிரகாரம் தற்போது பஸ் கட்டணத்தை அதிகரிக்க முடியாது எனவும் இதுவரை பஸ் கட்டணத்தை உயர்த்துமாறு எவரும் கோரிக்கை விடுக்கவில்லை எனவும் தெரிவித்தார்..



பஸ் கட்டணங்களை

## 10% அதிகரிப்போம்

பஸ் சங்கங்களின் கோரிக்கைக்கு முறையான தீர்வு கிடைக்காவிடின், அடுத்த வாரம் முதல், பஸ் கட்டணங்களை 10 சதவீதம் அதிகரிப்போம் என்று இலங்கை தனியார் பஸ்களின் உரிமையாள சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன, வியாழக்கிழமை (01) தெரிவித்தார்.

ஜனவரி 31ஆம் திகதி நள்ளிரவு முதல், எரிபொருள் கட்டணங்களின் விலைகள் அதிகரித்துள்ளன. அதன்பிரகாரம் ஒரு லீற்றர் டீசலின் விலை 5 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அது பஸ்களின் ஆரம்பக்கட்டணமாக 22 ரூபாவில் கடும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

> **ஒரு லீற்றர் டீசலின் விலை 5 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. பஸ்கட்டணங்களை 10 சதவீதத்தால் அதிகரித்தால், ஆரம்பக்கட்டணம் 35 ரூபாவாகும்**



முழுச் செய்தி P12

## கெஹலியவுக்கு பயணத் தடை

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல வெளிநாடு செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த வெளிநாட்டு பயணத்தடையை மாளிகாகந்த நீதவான் நீதிமன்றம் வியாழக்கிழமை (01) விதித்துள்ளது.

அத்துடன், அவரை குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் வெள்ளிக்கிழமை (02) முன்னிலையாகுமாறு நீதிமன்றம் மேலும் உத்தரவிட்டுள்ளது.




## உண்ணாவிரதத்தில் குதிக்க முருகன், ராபர்ட் முஸ்தீபு

**எங்களது உரிமைகளுக்கோ உணர்வுகளுக்கோ எந்த மதிப்பும் இல்லை**

திருச்சி சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள முருகன், ராபர்ட் பயஸ் ஆகியோர் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபடப் போவதாக தமிழக முதலமைச்சர் மு.கா. ஸ்டாலினுக்கு கடிதம் அனுப்பி உள்ளனர்.

இந்த கடிதத்தில் இருவரும் தெரிவித்துள்ளதாவது

“முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் 32 ஆண்டுகளுக்கும் மேலாக



முழுச் செய்தி P12

நிகழ்நிலைக் காப்புச் சட்டமூலத்தை

## சான்றுரைப்படுத்தினார் சபாநாயகர்



தேசிய நீரளவை சட்டமூலம், நீதிமன்றம், நியாயசபை அல்லது நிறுவனமொன்றை அவமதித்தல் சட்டமூலம் ஆகியவற்றுக்கும் சபாநாயகரின் சான்றுரை

ஜனவரி மாதம் 23 மற்றும் 24ஆம் திகதிகளில் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்ட நிகழ்நிலைக் காப்புச் சட்டமூலத்தை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, வியாழக்கிழமை (01) சான்றுரைப்படுத்தினார்.

முழுச் செய்தி P12

PAGE 1 தொடர்ச்சிகள்

# “உட்கட்சி முரண்பாடுகள் வரும்”

மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென் எருவில்பற்று பிரதேசத்திற்கான அபிவிருத்திக்குழுக் கூட்டம் களுவாஞ்சிகுடியில் அமைந்துள்ள பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் வியாழக்கிழமை (01) நடைபெற்றது. இதன்போது கலந்து கொண்ட பின்னர் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் தலைவர் மாவை.சேனாதிராஜா, கட்சியின் கூட்டத்தை ஒத்தி வைத்துள்ளதாக அறிவித்திருந்தார். உண்மையிலேயே கட்சியின் கூட்டங்களை நடாத்துவது, அதனை ஒத்திவைப்பது தொடர்பான அதிகாரங்கள் பொதுச் செயலாளருக்குத்தான் உண்டு. திருகோணமலையில் அண்மையில் நடைபெற்ற கட்சியின் பொதுக்கூட்டத்துக்கு பதில் பொதுச் செயலாளராக கடமையாற்றிய டொக்டர் சத்தியலிங்கம் வருகை தராத காரணத்தினால் கட்சியின் யாப்பின் பிரகாரம் இரண்டாவது துணைச் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தலைமையில் நடைபெற்றது.

எனவே கூட்டத்தை நடாத்துவது. அதனை ஒத்தி வைப்பது தொடர்பான அதிகாரம் பதில் பொதுச் செயலாளருக்குத்தான் உள்ளது. இது ஒரு சட்ட ரீதியான விடயமாகும் அந்த அடிப்படையில் கூட்ட தீர்மானம் என்ன என்பது தொடர்பில் அவர் தலைவருக்கு கடிதம் எழுதியுள்ளதாக நான் அறிகின்றேன். அதற்குரிய கடிதத்தையும் நான் பார்த்திருந்தேன். இந்த விடையம் தொடர்பில் ஊடகங்களுககு கருத்துக்கள் வழங்குவது தொடர்பில் உட்கட்சி முரண்பாடுகள் பல வரும் காரணமாக இதுதொடர்பில் நான் மேலதிக விபரங்களை நான் தெரிவிக்க விரும்பவில்லை என்றார்.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதியை அரசாங்கம் மூன்று வருடங்களாக வழங்காமல் உள்ளது. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் வடக்கு, கிழக்கிலுள்ள மாவட்டங்களுக்கு விசேட நிதி ஒதுக்கீடுகள் ஒதுக்க வேண்டும்.

யுத்தம் முடிவுற்று 15 வருடங்கள் கடந்த நிலையிலும் நாங்கள் இன்றுவரையில் எமது கோரிக்கைகள் அனைத்தும் தெற்கிலே இருக்கின்ற மாவட்டங்களோடு சமநிலைப்படுத்துவதற்கு மாறி மாறி வந்த அரசாங்கங்கள் அவற்றை மேற்கொள்வதற்குத் தவறியிருக்கின்றன.

தேர்தல் வரவிருக்கும் ந்நிலையில் 25 கோடி ரூபாய் நிதிதான் இந்த மாவட்டத்திற்கு தற்போது அபிவிருத்திக்காக வந்துள்ளது. அதுவும் மாவட்ட செலயகத்தின் ஊடாகத்தான் இந்த ஒதுக்கீடுகள் வருகின்றன. இந்நிலையில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கே எந்த ஒதுக்கீடும் இல்லாத நிலையே இருக்கின்றது. இந்நிலையில் மக்களுடைய சிறிய சிறிய குறைபாடுகளை நிவர்த்தி செய்ய முடியாத நிலையில் இந்த அரசாங்கம் இருக்கின்றது.

இதேவேளை நிருவாக ரீதியான சீர்கேடுகளை நாம் சீர் செய்வதற்குரிய முயற்சிகளை எடுத்தாலும்கூட மக்களுடைய பொதுவான பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்கு நிதி தொடர்பான விடையத்தில் போதுமான அளவு நிதியில்லை.மாறாக தெற்கிலே பல விடையங்க் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

# இம்மாதம் முதல் மதிய உணவு

பாடசாலை மாணவர்களின் சத்துணவு நிலையை மேம்படுத்தும் நோக்கில், அரிசியில் இரும்பு மற்றும் போலிக் அமிலம் கலந்து தயாரிக்கப்படும் வலுவூட்டப்பட்ட சாதம் தயாரிக்கும் பணியை உணவு மேம்பாட்டு சபை ஆரம்பித்துள்ளது.

உணவு ஊக்குவிப்புச் சபைக்கு சொந்தமான கலங்குட்டிய அரிசி ஆலையில் அரிசி உற்பத்தி ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அதன் தலைவர் பாலிந்த சாகர தெரிவித்தார்.

இத்திட்டத்தின் கீழ், பாடசாலை மாணவர்கள் 5இலட்சம் பேருக்கு, 8 மாத காலத்திற்கு, இந்த பதப்படுத்தப்பட்ட அரிசியுடன் மதிய உணவு வழங்கப்பட உள்ளது. இந்த வேலைத்திட்டத்திற்காக உலக உணவுத் திட்டம் ஜனாதிபதி செயலகத்தின் ஊடாக விவசாய அமைச்சுக்கு 108 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது.

# மார்ச் 12 இயக்கம் கடும் கண்டனம்

அத்துடன், தற்போதைய அரசாங்கமானது இந்தச் சட்டமூலத்தினை நிறைவேற்றப் பிடிவாதமாகச் செயற்படுகின்றது; பொருளாதார சீர்திருத்தம் மற்றும் நடைபெறவிருக்கும் தேர்தல்கள் ஆகிய முக்கியமான நிகழ்வுகளில் கருத்து வேறுபாடுகளினை மௌனமாக்குவதும், சிவில் செயற்பாடுகளை ஒடுக்குவதும் அரசாங்கத்தின் நோக்கமாக உள்ளமை இதிலிருந்து தெளிவாகத் தென்படுகின்றது என்பதனைவருத்தத்துடன் தெரிவிக்கின்றோம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனநாயக விரோதச் சட்டத்தினை அறிமுகப்படுத்தியமை மட்டுமல்லாமல், சட்டத்தினை இயற்றுவதற்கு முன் நீதித்துறையின் மறுபரிசீலனை செய்வதற்காக, அரசியலமைப்பினூடாக உத்தரவாதம் அளிக்கப்பட்ட உரிமைகளினை மீறுவதனூடாக பாராளுமன்றம் அதற்குப் புறம்பாக செயற்பட்டுள்ளது என்பதனை மார்ச் 12 இயக்கம் மிகுந்த கவலையுடன் குறிப்பிடுகின்றது.

நிகழ்நிலைக் காப்புச் சட்டமூலத்தின் அரசியலமைப்புத்தன்மையினை மதிப்பிடுவதற்காக குடிமக்களில் பலரும், நிறுவனங்களும் உயர்நீதிமன்றத்தின் தலையீட்டினைக் கோரினர். சட்டமூலமானது நிறைவேற்றப்படுவதற்கு முன்பு திருத்தங்கள் தேவைப்படும் அதன் குறிப்பிட்ட உட்பிரிவுகளினை உயர்நீதிமன்றம் அடையாளம் கண்டது. எவ்வாறாயினும், இதுவரை எழுப்பப்பட்ட குற்றச்சாட்டுக்களை விசாரித்தபோது, நீதிமன்றத்தின் பரிந்துரைகளில் கோடிட்டுக் காட்டப்பட்ட முக்கியமான திருத்தங்களானது சட்டமூலம் நிறைவேற்றப்பட்டபோது கவனிக்கப்படவில்லை என்பதை அது வெளிப்படுத்துகின்றது.

அதே நேரத்தில், மக்களையும், எதிர்ப்பு சக்திகளையும் மௌனமாக்குவதற்காகவும் ஒடுக்குவதற்காகவும் பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலம் மற்றும் இலத்திரனியல் ஒலிபரப்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுச் சட்டமூலம் போன்ற மேலும் பல சட்டங்களை அரசாங்கம் பின்பற்றி வருகின்றது. இந்த இக்கட்டான சூழ்நிலையில், நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் நிலையியற் கட்டளைகளைப் பயன்படுத்தி பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது. இது நிறுவப்பட்ட வெஸ்ட்மின்ஸ்டர் மாதிரியினைப் பின்பற்றும் பாராளுமன்றத்தின் பாரம்பரியத்தினை குறைமதிப்பிட வாய்ப்பளிக்கிறது.

அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவினை சமாளிக்க முடியாத பட்டினிக்கு மத்தியில் குடிமக்கள் அமைதியாகத் துன்புறும் வேளையில், இந்த மௌனம் கீழ்ப்படிதலுக்கு சமமானதல்ல என்பதனை ஆட்சியாளர்கள் உணர வேண்டியது அவசியமானதாகும். இது அரசாங்கத்தின் வலுக்கட்டாய ஆட்சிக்கு எதிரான பெரும் எதிர்ப்பிற்கு முன்னோடியாக அமையுமென மார்ச் 12 இயக்கம்எச்சரிக்கின்றது.

இந்த முன்னேற்றங்களின் பின்னணியில், உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள திருத்தங்களானது நிகழ்நிலைக் காப்புச் சட்டமூலத்தில் முழுமையாக இணைக்கப்படுவதனை உறுதி செய்யுமாறு பாராளுமன்றத்தின் மதிப்பிற்குரிய சபாநாயகரை நாம் மரியாதையுடன் கேட்டுக்கொள்கின்றோம். பாராளுமன்றம் சட்டங்களை நிறைவேற்றும்போது உரிய செயல்முறைகளினைப் பின்பற்றுவதற்கும், நீதித்துறை மற்றும் குடிமக்களின் இறையாண்மைகளுக்கு மதிப்பளிக்கும் விதமாக இலங்கையில் தூய்மையான அரசியலினை ஊக்குவிப்பதோடு ஜனநாயகத்தினை வலுப்படுத்துவதும் அத்தியாவசியமானதாகும் என்றும் குறிப்பிட்டுள்ளது.

# படையினர் களமிறக்கம்

களுபோவில, கராப்பிட்டிய, மஹாமோதர, பேராதனை, அனுராதபுரம் மற்றும் குருநாகல் போதனா வைத்தி யசாலைகள், மாத்தறை, பலா ங்கொடை, ஹேலியகொட, நாவலப்பிட்டி, பதுளை, கம்பளை,மீரிகம,ஹோமாகம மற்றும் கேகாலை உட்பட 26 வைத்தியசாலைகளின் அன்றாட நடவடிக்கைகள் தடையின்றி தொடர்வதற்கு படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

தற்போது அந்த மருத்துவமனைகளின் தேவைக்கு ஏற்ப சுமார் 700 இராணுவத்தினர் களமிறக்கப்பட்டுள்ளதுடன் அவசரநிலை ஏற்பட்டால் மேலதிக படையினரை அனுப்புவதற்கு தயார்படுத்துமாறும் பொதுமக்களுக்கான சுகாதார தேவைகளை தடையின்றி வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு இராணுவத் தளபதியினால் பாதுகாப்பு படைத் தலைமையக தளபதிகள் மேலும் அறிவுறுத்தப்படுள்ளனர்.

# 10% அதிகரிப்போம்

ஆகையால், நூற்றுக்கு 10 சதவீதம் பஸ்கட்டணங்களை அதிகரித்தால், ஆரம்பக் கட்டணம் 35 ரூபாவாகும் என்றார்.

எரிபொருட்களின் விலைகள் ஜனவரி (31) நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, ஒக்டேன் 92 ரக பெற்றோல் விலை 5 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 371 ரூபாவாகும்.

ஒக்டேன் 95 ரக பெற்றோல் விலை 8 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 456 ரூபாவாகும்.

மேலும், ஒட்டோ டீசல் 5 ரூபாயால் உயர்த்தப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 363 ரூபாவாகும், ஒரு லீட்டர் சுப்பர் டீசல் 7 ரூபாவால் உயர்த்தப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 468 ரூபாவாகும்.

இதேவேளை, மண்ணெண்ணெய் விலையும் 26 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் அதன் புதிய விலை 262 ரூபாவாகும்.

இதேவேளை, சிபெட்கோவின் புதிய விலைக்கு ஏற்ப எரிபொருட்களின் விலைகளை லங்கா ஐஓசி நிறுவனமும் அதிகரித்துள்ளது.

# சான்றுரைப்படுத்தினார் சபாநாயகர்

இதற்கமைய இந்தச் சட்டமூலம் 2024 ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க நிகழ்நிலைக் காப்புச் சட்டமாக நடைமுறைக்கு வருகிறது.

அத்துடன், பாராளுமன்றத்தில் விவாதித்து திருத்தங்களுடன் கடந்த ஜனவரி மாதம் 09ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட தேசிய நீரளவை சட்டமூலம் மற்றும் ஜனவரி மாதம் 10ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட நீதிமன்றம், நியாயசபை அல்லது நிறுவனமொன்றை அவமதித்தல் சட்டமூலம் ஆகியவற்றிலும் சபாநாயகர் தனது கையொப்பத்தையிட்டு சான்றுரைப்படுத்தினார். இதற்கமைய இந்தச் சட்டமூலங்கள் 2024ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க தேசிய நீரளவை சட்டம் மற்றும் 2024ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க நீதிமன்றம், நியாயசபை அல்லது நிறுவனமொன்றை அவமதித்தல் சட்டமாக நடைமுறைக்கு வருகின்றன.

# உண்ணாவிரதத்தில் குதிக்க முருகன், ராபர்ட் முஸ்தீபு

சிறைவாசம் அனுபவித்து வந்த நிலையில்இ ஏறக்குறைய ஒன்றை ஆண்டுகளுக்கு முன்பு உச்ச நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டோம்.

சட்டத்தின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டாலும் இன்னும் சிறை கொட்டடியில் இருந்து விடுவிக்கப்படவில்லை. சிறப்பு முகாம் எனப்படும் மற்றொரு சிறையில் அடைத்தார்கள். திருச்சியில் உள்ள சிறப்பு முகாமில் ராபர்ட் பயஸ், ஜெயக்குமார், சாந்தன், முருகனும் அடைத்து வைக்கப்பட்டுள்ளோம்.

சிறப்பு முகாம் எனப்படுவது சிறையை விட கொடுமையானதாக இருக்கிறது. இங்கு நடைபயிற்சி செய்வதற்கோ நண்பர்களை பார்ப்பதற்கோ முடியவில்லை.

சிறைவாசிகளோடு பழகுவதற்கு கூட எந்தவித அனுமதியும் வழங்கப்படுவதில்லை. சிறப்பு முகாமில் அடைக்கப்பட்ட நாளில் இருந்து பல மாதங்கள் ஆரம்பத்தில் அறையிலேயே தங்க வைக்கப்பட்டதால் பல நோய்களுக்கு உள்ளாகி உள்ளோம்.

எங்களது உடல் நலத்தை சரி செய்ய நடைபயிற்சி செய்ய அனுமதி கேட்டும் இதுவரை எந்த அனுமதியும் வழங்கப்படவில்லை. இதனால் நோய்வாய்ப்பட்டுள்ளோம்.

கடந்த மாதம் திருச்சி அரசு மருத்துவமனை சென்று ஆய்வு செய்த போது ரத்த அழுத்தம், கொழுப்பு, சிறுநீரகக் கல், மூட்டு வலி இருப்பதாக மருத்துவர்கள் சான்றிதழ் வழங்கியுள்ளார்கள். அதனால் கடந்த 22.1.2024 ஆம் திகதி அன்று மீண்டும் மாவட்ட ஆட்சியருக்கு நடைப்பயிற்சி செய்யவும் விளையாடவும் அனுமதி கேட்டு கடிதம் எழுதியும் இதுவரை எந்தவித பதிலும் இல்லை.

> **அகதிகள் நேரடியாக பிற நாடு செல்வதற்கு இலங்கை அரசு கடவுச்சீட்டு வழங்கிட அனுமதி வழங்கி வருகிறது. அதற்கு இலங்கை தூதரகம் அழைத்து போய் கடவுச்சீட்டு பெறவும் அனுமதி கேட்டுள்ளோம். இதுவரை எந்த பதிலும் கிடைக்காததால் வேறு வழியின்றி கால வரையற்ற உண்ணா மறுப்பு போராட்டத்தை முன்னெடுக்க உள்ளோம்**

இந்த முகாமில் எங்களது உரிமைகளுக்கோ உணர்வுகளுக்கோ எந்த மதிப்பும் இல்லை. இதனால் தான் சாந்தன் உடல்நலக் குறைபாட்டால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

அதே நிலை தொடர்ந்தால் நாங்கள் இங்கேயே இறப்பது உறுதி. எங்கள் உயிருக்கு ஏதேனும் ஆபத்து நேரிட்டால் அதற்கு இங்குள்ள அதிகாரிகளே பொறுப்பேற்க வேண்டும்.

அகதிகள் நேரடியாக பிற நாடு செல்வதற்கு இலங்கை அரசு கடவுச்சீட்டு வழங்கிட அனுமதி வழங்கி வருகிறது. அதற்கு இலங்கை தூதரகம் அழைத்து போய் கடவுச்சீட்டு பெறவும் அனுமதி கேட்டுள்ளோம். இதுவரை எந்த பதிலும் கிடைக்காததால் வேறு வழியின்றி கால வரையற்ற உண்ணா மறுப்பு போராட்டத்தை முன்னெடுக்க உள்ளோம்” என்று அந்த கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

# புதனன்று திறக்கப்படும்

கொள்கை அறிக்கை மீதான விவாதத்தை எதிர்வரும் 8 மற்றும் 9 ஆம் திகதிகளில் காலை 9.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை நடத்துவதற்கு பாராளுமன்ற விவகாரங்களுக்கான குழு வியாழக்கிழமை (1) தீர்மானித்துள்ளது.

பாராளுமன்ற விவகாரங்களுக்கான குழு வியாழக்கிழமை (01) சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் பாராளுமன்ற கட்டிடத் தொகுதியில் கூடியது.

இதற்கமைய, எதிர்வரும் 7ஆம் திகதி பாராளுமன்றம் நடைபெறும் சந்தர்ப்பத்தில் விசேட பாதுகாப்பு வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்த பாதுகாப்பு திணைக்கள தலைவர்கள் தீர்மானித்துள்ளனர்.

### பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலத்தை

# சட்டமாக்க சர்வஜன வாக்கெடுப்பு அவசியம்

## சட்ட முதுமாணி ரவூப் ஹக்கீம் வாதம்

பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலம் அரசியலமைப்புக்கு முற்றிலும் முரணாக இருப்பதால்,அதனை சட்டமாக்குவதற்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையோடு, சர்வசன வாக்கெடுப்பும் அவசியம் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், சட்ட முதுமாணி ரவூப் ஹக்கீம், உயர்நீதிமன்றத்தில் செவ்வாய்க்கிழமை(30) வாதிட்டார்.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை (Anti Terrorism Bill)கேள்விக்குட்படுத்தி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் கட்சியின் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் தாக்கல் செய்திருந்த SD.SC.No.27.24 இலக்க சிறப்பு நிர்ணய மனு(Special Determination Application) அன்றைய தினம் ,உயர் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது, முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் சட்ட முதுமாணி ரவூப் ஹக்கீம் தாமாகவே வாதங்களை முன் வைத்தார் . பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையில் ,நீதியரசர்களான விஜித் மலல்கொட,ஏ.எச்.எம்.டீ.நவாஸ்,ஷிரான் குணரட்ண,அருண ஒபயசோசேகர ஆகிய ஐவர் அடங்கிய நீதியரசர் குழாம் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.



# சமூக வலைத்தளங்களில் பரவும் செய்தி பொய்யானது

ஐக்கிய மக்கள் சக்தியோடு இணைந்து கொண்ட முன்னாள் இராணுவ தளபதி தயா ரத்நாயக்க மவ்பிம ஜனதா கட்சியில் இணைந்து கொண்டுள்ளதாக சமூக வலைத்தளங்களில் செய்தியொன்று பரவி வருகின்றது.

இது பொய்யான செய்தி என்பதோடு, அவ்வாறானதொரு சம்பவம் நடக்கவில்லை எனயென ஜனாதிபதி தேர்தல் செயற்பாட்டுப் பிரதானி சுஜீவ சேனசிங்க தெரிவித்துள்ளார்.

பகிரப்பட்டு வரும் புகைப்படம் பழைய புகைப்படம் என்பதோடு,இதுபோன்ற புகைப்படத்தை பயன்படுத்தி அரசியல் பிரசாரம் செய்து வருவதையும் வன்மையாக கண்டிப்பதாகவும் ஐக்கிய மக்கள் சக்தியை பலப்படுத்துவதற்காக பல்வேறு தரப்பினரும் ஒன்றிணைவதால்,இவ்வாறான போலிப் பிரசாரங்கள் எதிர்காலத்திலும் இடம்பெறலாம்.

> **அது சிறந்த ஊடக நடைமுறையாக இருந்திருக்கும் என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன் என ஜனாதிபதி தேர்தல் செயற்பாட்டுப் பிரதானி சுஜீவ சேனசிங்க தெரிவித்துள்ளார்**

இவ்வாறான புகைப்படங்களை வெளியிடுவதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட தரப்பைச் சேர்ந்த ஜெனரல் தயா ரத்நாயக்க அவர்களிடம் விசாரித்திருந்தால்,அது சிறந்த ஊடக நடைமுறையாக இருந்திருக்கும் என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன் என ஜனாதிபதி தேர்தல் செயற்பாட்டுப் பிரதானி சுஜீவ சேனசிங்க தெரிவித்துள்ளார்.

# “வடகிழக்கை பிரித்து தனிநாடு தரவேண்டும்”

கனகராசா சரவணன்



“சட்டம் இல்லாத நாட்டிலே ஒரு சட்டத்துக்கான அமைச்சர் தேவையில்லை தெற்கிலே ஒரு சட்டம் வடக்கு கிழக்கில் ஒரு சட்டத்தை அமுல்படுத்துவீர்களாக இருந்தால் வடகிழக்கை பிரித்து தனிநாடாக தரவேண்டும் அதேவேளை தமிழ் மக்களின் உரிமைகளை பெறுவதற்காக உயிரிழந்த அனைத்து தமிழ் மக்களுக்காகவும் எத்தனை அச்சுறுத்தல் எத்தனை பேருக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு தொடர்ந்தாலும் தொடர்ச்சியாக நினைவேந்தல்களை செய்வோம் என பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன் காட்டம்.

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு அமைக்கப்பட்ட நினைவு தூபியில் 2022 நினைவேந்தலில் ஈடுபட்ட கருணாகரன், தமிழ் தேசிய மக்கள் முன்னணி தேசிய அமைப்பாளர் த.சுரேஸ்க்கு எதிராக நீதிமன்ற தடை உத்தரவை மீறி நினைவேந்தலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் பொலிஸாரால் வழக்கு பதிவுசெய்யப்பட்டது.

மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.எச்.முகமட் ஹம்சா தலைமையில் புதன்கிழமை (31) விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது நீதிமன்றில் கோ. கருணாகரன், தமிழ் தேசிய மக்கள் முன்னணி தேசிய அமைப்பாளர் த.சுரேஸ் ஆஜராகியிருந்தனர்.

விசாரணையின் பின்னர் வழக்கை எதிர்வரும் மே 5ம் திகதிக்கு நீதவான் ஒத்திவைத்துள்ளார். இதன் பின்னர் அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்.

“கடந்த 1987 ம், 1991 ம் ஆண்டு கொக்கட்டிச்சோலையில் படுகொலை செய்யப்பட்ட 152 பேர்களுக்காக அமைக்கப்பட்ட நினைவு தூபியில் வருடா வருடம் ஜனவரி 28ம் திகதி நினைவு கூர்ந்து வருவது வழமை இந்த நிலையில் கடந்த 2022 ஜனவரி 28 வழமை போல நானும் எனது கட்சி உறுப்பினர்கள் உட்பட பலர் சென்று நினைவேந்தலுக்கு விளக்கேற்றினோம். எந்தவிதமான தடை உத்தரவும் எங்களுக்கு கிடைத்திருக்கவில்லை

அதன் பின்னர் எனக்கும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ்க்கும் பொலிஸார் நீதிமன்ற தடை உத்தரவு வழங்கினர். 2021, 2022, 2023 மற்றும் 2024 விளக்கேற்றினோம். எந்த விதமான பிரச்சனையும் இல்லை. ஆனால், 2022 கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சியில் இருந்த காலம் அவரின் உத்தரவின் பெயரில் தடை உத்தரவு வழங்கப்பட்டிருந்தது.

இந்த நாடு ஒரு ஜனநாயக நாடு. இந்த நாட்டிலே ஒரு சட்டம் இல்லை என்பது வெளிப்படையாக தெரிகின்றது இந்த நாட்டை ஆளவருகின்ற ஆட்சியாளர்கள், அரச அதிபர்கள் தாங்கள் நினைத்ததையே சட்டமாக கொண்டு நடாத்துவது தான் ஒரு முறையாக இருக்கின்றது

இந்த நாட்டில் ஜனநாயகம் இருக்கின்றதா? அல்லது ஒரே நாடு என்ற சட்ட முறை இருக்கின்றதா? என்பதை நாட்டுமக்கள் உணரவேண்டும் வடக்கு கிழக்கிலே இறந்தவர்களுக்கு நாங்கள் நினைவு கூர்வது விளக்கேற்ற முடியாது என கூறினால் தெற்கிலே இந்த நாட்டிலே பெரும் கிளர்சி ஏற்படுத்திய ஜே.வி.பி தங்களது தலைவர்கள் மற்றும் மரணித்தவர்களுக்கு பல்கலைக்கழகங்களில் சிலை வைத்து நினைவு கூறலாம் என்றால் வடக்கு,கிழக்கில் இப்படியான தடைகள் ஏன் இருக்கின்றன. இந்த தடைகளை மாறிமாறி ஆட்சிக்கு வருபவர்கள் தான் விரும்பியபடி செய்பவர்களாக இருந்தால் இந்த நாட்டில் ஜனநாயகம் சட்டமும் இல்லை.

ஒரே நாட்டில் ஒரே சட்டத்தை பேணி பாதுகாக்க முடியாவிட்டால் ஒரே நாடு தேவையில்லை அந்த நிலைமைக்கு நீங்கள் எங்களை தள்ளிவிடுகின்றீர்கள் தெற்கிலே நடை பெறுவது வடக்கு, கிழக்கில் நடைபெறவேண்டும் ஒரே நாடு ஒரே சட்டமாக இருந்தால் இப்படியான தொந்தரவுகளை கொடுக்ககூடாது.

தமிழ் தேசியத்துடன் இணைந்திருக்கும் தமிழ் தேசிய தலைவர்களை எங்கள் இறந்த மக்களுக்காக அஞ்சலி செலுத்த கூடாது என அச்சுறுத்துவதன் மூலம் நாங்கள் இதை நிறுத்த போவதில்லை எங்களுக்காக உயிர் நீத்தவர்களை தொடர்ச்சியாக நினைவு கூர்ந்து கொண்டிருப்போம்.

அவர்கள் தமிழ் மக்களின் உரிமைகளை பெறுவதற்காக மரணித்தவர்கள் அதில் பொதுமக்களும் சிக்குண்டு மரணித்துள்ளனர் எனவே எத்தனை அச்சுறுத்தல்கள் எத்தனை பேருக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு தொடர்ந்தாலும் தொடர்சியாக நினைவேந்தல்களை செய்து கொண்டுவருவோம் அதனை செய்ய வேண்டிய கடமை எங்களுக்கு இருக்கின்றது” என கூறியுள்ளார்.

## கட்டுப்பாட்டை இழந்த இளைஞன் உயிரிழப்பு



எஸ். தில்லைநாதன்

மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்ற, கிளிநொச்சி - ஊற்றுப்புலம் பகுதியை சேர்ந்த பொ.அபிசாகன் (வயது 20) வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளாகி சிகிச்சைப்பெற்று வந்த நிலையில் வியாழக்கிழமை (01) உயிரிழந்துள்ளார்.

குறித்த இளைஞன் தலைக்கவசம் அணியாத நிலையில் கடந்த 26 ஆம் திகதி மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்றுக்கொண்டிருந்தபோது, மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து மதிலுடன் மோதி விபத்துக்குள்ளாகியது.

அவரை மீட்டு கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டுள்ளதுடன் உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

## அதீத போதைப்பொருள் பாவனையால் மரணம்



எம்.றொசாந்த்

யாழ்ப்பாண சிறைச்சாலையில் இருந்து அண்மையில் விடுதலையான இளைஞன் , அதீத போதைப்பொருள் பாவனையால் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

போதைப்பொருள் தொடர்பான வழக்கொன்றில் சிறைத்தண்டனை அனுபவித்து கடந்த 26ஆம் திகதி விடுதலையான இளைஞன் செவ்வாய்க்கிழமை (30) இரவு , வீட்டில் மூச்சின்றி காணப்பட்டதையடுத்து , இளைஞனை வைத்தியசாலைக்கு வீட்டார் கொண்டுச் சென்ற போது , இளைஞன் உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் அறிக்கையிட்டனர்.

அதீத அளவில் போதைப்பொருளை நுகர்ந்தமையால் உயிரிழப்பு ஏற்பட்டுள்ளதாக ஆரம்பக்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

## நெற்செய்கை அழிவு; இழப்பீடு வழங்க கோரிக்கை

ரீ.எல்.ஜவ்பர்கான்

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட பெரு வெள்ளம் காரணமாக கொக்கட்டிச்சோலை கமநல சேவை பிரிவில் இம்முறை செய்கை பண்ணப்பட்ட பெரும்போக நெற்செய்கை அழிவடைந்துள்ளதாக கொக்கட்டிச்சோலை கமநல அபிவிருத்தி நிலையம் தெரிவித்துள்ளது.

இம்முறை மட்டக்களப்பு மாவட்டத்தில் சுமார் 13,000 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் பெரும்போக நெற்செய்கை பண்ணப்பட்டுள்ளதுடன் அண்மையில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக கொக்கட்டிச்சோலை கமநல சேவை பிரிவில் செய்கை பண்ணப்பட்ட பெரும்போக நெற்செய்கையில் 4,354 ஏக்கர் அழிவடைந்து சுமார் 1,500 விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் பாதிக்கப்பட்ட விவசாயிகள் தமக்கு இழப்பீடுகளை வழங்க அரசாங்கம் முன்வரவேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ‘ஜெரம் புத்தா’வுடன் நால்வர் மாயம்

எம்.இஸட். ஷாஜஹான்

நீர்கொழும்பு பிட்டிப்பன துறைமுகத்திலிருந்து மீன் பிடிக்க கடலுக்குச் சென்ற நான்கு மீனவர்கள் படகுடன் காணாமல் போன சம்பவம் கடந்த 17 ஆம் திகதி இடம்பெற்றுள்ளது.

காணாமல் போனவர்கள் நீர்கொழும்பு , சிலாபம், மாவெவ மற்றும் தொடுவாவை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என தெரியவந்துள்ளது.

இது தொடர்பாக ‘ஜெரம் புத்தா’ என்ற காணாமல் போன படகின் உரிமையாளர் கடந்த 27ஆம் திகதி நீர்கொழும்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதுடன் கடற்படையினருக்கும் அறிவித்துள்ளதாக படகின் உரிமையாளர் தெரிவித்துள்ளார்.



## கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம்...

செ.தி.பெருமாள்

மஸ்கெலியா பொலிஸ் பிரிவிற்கு உட்ப்பட்ட ப்ரௌன்லோ தோட்டத்தில் சுமார் 200 தொழிலாளர்கள் வியாழக்கிழமை (01) காலை 7.30.மணி முதல் 8.30.மணிவரை மஸ்கெலியா - நோட்டன் பிரதான வீதியில் ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்துள்ளனர்.

நாட்டில் சகல பொருட்களுடைய விலைகளும் நாளாந்தம் உயரும் நிலையில் , ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கூறியபடி 1,700 ரூபாய் வேதனம் நாளாந்தம் வழங்க வேண்டும் என கோரிக்கையை முன்வைத்தே இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.



## களத்தில் குதித்தார் வடிவேல் சுரேஷ்

பதுளை, மீதும்பிடியவில் ஏற்பட்ட மண் சரிவினால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கு பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தினுடைய பொதுச் செயலாளர் மற்றும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான வடிவேல் சுரேஷ் புதன்கிழமை (31) விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார்.

இதன்போது மண் சரிவினால் பாதிக்கப்பட்டு தற்காலிக குடியிருப்புகளில் தங்க வைக்கப்பட்டவர்களுக்குரிய காணி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களுக்குரிய நிறை குறைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

மேலும், “மீதும்பிடிய A பிரிவில் பாதிக்கப்பட்டுள்ள 78 குடும்பங்களுக்கும் ஸ்ரீ கணேஷா பாடசாலைக்கு அருகிலும் 96Cயில் பாதிக்கப்பட்ட 32 குடும்பங்களுக்கும் டெமேரியா A மூன்றாம் இலக்கப் பகுதியிலும் ஹொப்டன் தோட்டத்தில் பாதிக்கப்பட்ட 145 குடும்பங்களுக்கும் முதலாம்



இலக்க மலையிலும் காணி ஒதுக்கீடு செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன” என்றார்.

## “ஓரம் கட்டும் வரையில் அணித்திரள்வார்கள் ”

ஆ.ரமேஸ்

இந்த அரசாங்கத்தை விரட்டி, புதிய அரசாங்கத்தை அமைக்கும் வரையிலும் இந்நாட்டு மக்கள் ஓரணியில் அணிதிரள்வார்கள் என நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் உதயகுமார் தெரிவித்தார்.

எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி கொழும்பில், ஜனவரி 30ஆம் திகதியன்று ஆரம்பித்த மாற்றத்துக்கான மக்கள் போராட்டத்தின் மீது கண்ணீர்ப்புகைக் குண்டுத் தாக்குதல், நீர்த்தாரை பிரயோகம் தொடர்பாக வியாழக்கிழமை (01) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

“ மக்களின் வாழ்க்கையில், பல்வேறு பிரச்சனைகள் தலைத்தூக்கியுள்ள நமது நாட்டில் சுமார் 60 சதவீத குடும்பங்கள் கடனாளிகளாக மாற்றப்பட்டுள்ளனர் என்பதை புள்ளி விபரங்கள் காட்டுக்கின்றன.

இந்நிலையில் நிம்மதியாக வாழ முடியாது, ஒரு வேளை உணவு உண்டு வாழும் நிலைக்கு மக்கள் தள்ளிவிடப்பட்டுள்ளனர்.

இன்று பல்வேறுப்பட்ட வரிச்சுமைகளை மக்கள் மீது அரசாங்கம் ஏற்றியுள்ளது. வற் அதிகரிக்கப்பட்டதன் ஊடாக அன்றாட அத்தியாவசிய உணவு பொருட்களின் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இரவோடு இரவாக எரிபொருள் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன. அதனூடாக இந்த அரசாங்கம் மக்களின் வாழ்க்கையை அதல பாதாளத்துக்கு தள்ளிவிட்டுள்ளது என்றார்.



ஏழைகளின் பிரதான உணவாக இருந்த மரக்கறி உணவு செல்வந்தர்களின் உணவாக இன்று மாறியுள்ளது. போக்குவரத்து கட்டணங்களும் அதிகரிக்கப்பட்டுள்ளன. எரிவாயு மற்றும் மண்ணெண்ணை விலை அதிகரிப்பு காரணமாக வீடுகளில் உணவு சமைத்து உண்ண முடியாத நிலையை அரசாங்கம் ஏற்படுத்தியுள்ளது. மக்களின் வருமானம் அதிகரிக்கப்படவில்லை என்றார்.

நாளுக்கு நாள் தொழில் இன்மையும் அதிகரித்து செல்கிறது. இந்த நாட்டை வங்குரோத்து நிலைமைக்கு தள்ளிவிட்டுள்ள இந்த அரசாங்கம் நாட்டு மக்களை மேலும் மேலும் கடனாளியாக மாற்றிக்கொண்டு செல்கின்றது.

பொருளாதார தாழ்வு நிலை காரணமாக பெற்றோர்கள் தம் பிள்ளைகளை முறையாக பாடசாலைகளுக்கு அனுப்ப முடியாத துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாகியுள்ளனர். தற்போது நாடளாவிய ரீதியில் மாணவர்கள் பாடசாலை இடைவிலகல் பாரிய அளவு அதிகரித்துள்ளன என்றார்.

அதேபோல நாட்டில் மின் கட்டணம் அதிகரிப்பு செய்யப்பட்டதன் காரணமாக 15 சதவீத குடும்பங்கள் இருளில் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள் என தெரிவித்த அவர் இந்த அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தின் அனைத்து நிபந்தனைகளுக்கும் தலையாட்டி அனைத்து சுமைகளையும் மக்கள் மீது ஏற்றிவிட்டு இப்போது வேடிக்கை பார்த்து கொண்டு இருக்கின்றது. ஜனாதிபதி சுபபோக வாழ்கையை வாழ்ந்து வருகிறார் என சாடினார்.

# செலுத்தும் வரிக்கேற்ப வினைத்திறனான சேவைகள் கிடைக்கின்றனவா?

வலக்கை கொடுப்பது இடக்கைக்குத் தெரியக்கூடாது என்பர். அதற்கு பல அர்த்தங்கள் இருந்தாலும், இந்த நாட்டின் ஆட்சியாளர்கள், சாதாரண மக்களுக்கு வலது கையில் கொடுத்துவிட்டு இடது கையில் கொஞ்சம் சேர்த்தே அபகரித்துக்கொள்கின்றனர் என்பதே உண்மையாகும்.

உதாரணமாகக் சொல்லப்போனால், 'அஸ்வெசும' ஊடாக சாதாரண மக்களுக்கு கொஞ்சம் உதவித்தொகை வழங்கப்படுகின்றது. அதனை எடுக்கச் செல்லும் சாதாரண ஒருவர், கிடைக்கும் கொடுப்பனவை விடவும் மேலதிகமாக இரண்டாயிரம் அல்லது மூவாயிரம் செலவழித்து விடுகின்றார்.

தையுடன் வரியும் பிறந்து வலியும் அதிகரித்துவிட்டது. பெறுமதி சேர் வரி (வற்) அதிகரிப்புக்குப் பின்னர், அனைத்துப்பொருட்களின் விலைகளும் அதிகரித்துவிட்டனர். வற் விதிக்கப்படாத பொருட்களின் விலைகளையும் பெருமுதலைகள் அதிகரித்துவிட்டன. இதற்கிடையே எரிபொருட்களின் விலைகளும் சற்று எகிறிவிட்டன.

அபிவிருத்தியடைந்த நாடுகளில் வருமானவரி அறவீட்டு முறை நடைமுறையில் உள்ளதுடன், அந்த வரியைப் பயன்படுத்தி அந்நாடுகளில் குடிமக்களுக்கு உயர்ந்த வினைத்திறனான சேவைகள் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் அரச துறைசார் எந்தச் சேவையை பெற்றுக் கொள்ளச் சென்றாலும், நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலை; ஒரு நாள் பொழுதை செலவிட வேண்டிய நிலை போன்ற பல இன்னல்களுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது. மன உளைச்சல், அதிகாரிகளின் எரிச்சலூட்டும் செயற்பாடுகள், பாகுபாடுகள், அதிகாரப்போக்குடனான சேவை என வரி செலுத்துவோருக்கு எவ்விதமான நட்புணர்வையும் ஏற்படுத்தாத வகையிலேயே, அரச அதிகாரிகளால் சேவைகள் வழங்கப்படுகின்றன.

இலவசமாக வழங்கப்படும் கல்வி, சுகாதார வசதிகள் போன்றவற்றின் வினைத்திறனும் அண்மைக் காலங்களில் பெரிதும் திருப்தியற்றவகையில் அமைந்துள்ளன. குறிப்பாக, நாட்டில் நிலவும் மருந்துப் பொருட்களுக்கான தட்டுப்பாடு, இதில் பெரிதும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

உயர்ந்த தொகை வரி செலுத்துபவருக்கென எந்தவொரு விசேட சலுகைகளும் அரசாங்கத்தால் வழங்கப்படுவதில்லை. வரி செலுத்துவோரை ஊக்குவிக்கும் வகையில், எவ்விதமான நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொள்ளவில்லை. மாறாக எதற்கெல்லாம் வரி அறவிடப்படவில்லையே தேடித்தேடி வரிகளை விதிக்கிறது. அரச வருவாயை அதிகரிக்க, ஒவ்வொன்றுக்கான கட்டணங்களையும் அதிகரித்துவிடுகின்றது.

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து நிதி வசதியைப் பெற்றுக் கொள்வதற்கு, அந்த நிதியத்தால் விதிக்கப்பட்டிருந்த சில நிபந்தனைகளில், அரச வருமானத்தை அதிகரிப்பது என்பதற்கமைய இந்த வரி அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடவுச்சீட்டு, சாரதி அனுமதிப் பத்திரம், தேசிய அடையாள அட்டை, வாகனப் பதிவு மாற்றம், பிறப்பு மற்றும் இறப்புச் சான்றிதழ் பதிவு, சோலை வரி செலுத்தல், கட்டட நிர்மாண அனுமதி பெறல், நீர், மின்சார பிரச்சினைகள், பெயர் மாற்றங்கள், போன்ற சகல செயற்பாடுகளின் போதும், வரி செலுத்தும் மக்கள் பெரும்பாலும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்க நேரிடுகின்றது.

இந்நிலை மாறுமா? உயர்ந்தளவு வரி செலுத்துநர்களின் நலனில் அக்கறை காண்பித்து, நட்பான சேவைகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா? அது சமந்தமாக நடந்து கொள்ளும் அதிகாரிகளை தட்டிக் கேட்க மேலதிகாரிகள் முன்வருவார்களா?

தமிழ் Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## கறுப்பு யூலையின் நாற்பதாண்டுகளின் பின் – 37:

# தமிழரசுக் கட்சியின் சாதிய முகம்



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

தமிழரசுக் கட்சி தன்னை தமிழ்மக்கள் அனைவரதும் கட்சி என்று சொல்லிக்கொண்டாலும் நடைமுறையில் அது அவ்வாறு இல்லை என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மை. அதனிலும் மேலாக அது யாழ் மேட்டுக்குடி உயர்சாதியினரின் ஆதிக்கத்தில் இருந்த கட்சி. இந்த எண்ணப்போக்கை மாற்றுவதற்கான முயற்சியைக் கூட தமிழரசுக்கட்சி மேற்கொள்ளவில்லை. 'ஈழத்து காந்தி' என்று புகழப்பட்ட எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தின் ஜனநாயக முகமூடி உயர்சாதியினரின் கட்சியாக இயங்கிய தமிழரசுக்கட்சியை தற்காலிகமாகப் பாதுகாத்தது. ஆனால் அது நீண்டகாலம் நிலைக்கவில்லை. 'ஈழத்து காந்தி' என்ற படிமமே தவறானதும் ஏமாற்றும் நோக்குடையது என்பதை விரைவிலேயே மக்கள் புரிந்து கொண்டார்கள். காந்தியைப் போல அகிம்சை முறையில் போராடி தமிழருக்கு உரிமையை செல்வநாயகம் பெற்றுத்தருவார் என்று தொடர்ச்சியாகச் சொல்லப்பட்டது.

இவ்விடத்தில் இரண்டு விடயங்களை நோக்க வேண்டும். முதலாவது, காந்தியின் அகிம்சைப் போராட்டம் வெகுஜன மார்க்கத்தில் தன்னை நிலைப்படுத்திக் கொண்டது. வெகுமக்களின் பங்கேற்பும் தியாகங்களுமே காந்தியால் பரந்த தளத்தில் அகிம்சைப் போராட்டத்தை வெற்றிகரமாக நடாத்த உதவின. தமிழரசுத் தலைவர்கள் மக்களைத் திரட்டிப் போராடுவதில் நம்பிக்கையற்றவர்களாக இருந்தனர். அவர்களது மேட்டுக்குடி உயர்சாதிய மனநிலை அதற்கு இடம் கொடுக்கவில்லை. அவர்களில் ஆழ ஊறியிருந்த சாதிய வேறுபாடுகள் அனைவரையும் தமிழர்கள் என்ற தளத்தில் இணைப்பதைத் தடுத்தன.

இரண்டாவது, காந்தி தீண்டாமைக்கு எதிராகச் செயற்பட்டவர். அவரின் பாதியளவு முற்போக்குக் கூட செல்வநாயகத்திடம் இருந்தது என்பதை நம்ப இடமில்லை. அவரது நடத்தைகள் அவ்வாறே இருந்தன. இன்னமும் தமிழரசுக் கட்சி அனைத்து மக்களின் கட்சியாகவே இருந்தது என்று வாதிடுவோர் இருக்கிறார்கள். 1966இல் தீண்டாமை ஒழிப்புப் போராட்டங்களில் இந்தத் தலைவர்கள் யார் பக்கம் நின்றார்கள் என்று பார்த்தாலே தமிழரசுத் தலைவர்களின் சாதிய முகம் மிக இலகுவான வெளித்தெரியும்.

இலங்கையின் வடபுலத்தின் அரசியல் பரப்பில் சாதியத்தை மையமாகக் கொண்டு இயங்கியோரில் பொன்னம்பலம் இராமநாதன் முதன்மையானவர். அவரை வழிப்பட்டு இயங்கியவர் ஜி.ஜி. பொன்னம்பலம். இந்தப்பின்புலத்திலேயே தமிழரசுக் கட்சி தவிர்க்கவியலாமல் தன்னை நடுநிலையாளராகக் காட்டிக்கொள்ள முனைந்தாலும் இயலவில்லை. சாதிய ஆதிக்கம் வலுவாக இருந்த நிலையில் ஒடுக்கப்பட்ட சாதியினர் அமைப்பாகாமை, எந்தத் தேர்தல் தொகுதியிலும் அவர்கள் பெரும்பான்மையினராக இராமை ஆகியன அவர்களது அரசியல் ஆதிக்கத்துக்கான வாய்ப்பை மட்டுப்படுத்தியது.

1960களில் சாதியக் கொடுமைகளுக்கு எதிராகச் சட்டமியற்ற வேண்டிய தேவையை பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க உணர்ந்தார். இங்கு முக்கியமானது யாதெனில், தென்னிலங்கையின் சாதியம் குடாநாட்டின் தீண்டாமை போல உக்கிரமானதல்ல. எனினும் கரையோரப் பிரதேசங்கள் போக மற்றப் பகுதிகளில் சில சாதிப் பிரிவினர் கண்டியச் சிங்கள கொவிகம (வேளாள) ஆதிக்கத்தால் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தனர். ஆனால் வடபுலத்தின் சாதிய உக்கிரத்தை அறிந்திருந்த பிரதமர், இந்தப் பிரேரணையை சாதிய ஒடுக்குமுறையால் பாதிக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகளைக் கொண்ட தமிழரசுக் கட்சியை முன்மொழியும் படி கேட்டார். ஆனால் இறுதியில் இது ஒரு தனியார் பிரேரணையாகத் திருகோணமலைப் பாராளுமன்ற உறுப்பினரான ராஜவரோதயத்தால் முன் மொழியப்பட்டுச் சட்டமானது. இச்சட்டத்தின்படி பொது இடங்களில் சாதி அடிப்படையில் எவரையும் கீழ்மைப்படுத்துவதைச் சட்ட விரோதமானதாக்கும் ஒரு நடவடிக்கை எடுக்கப்பட்டது. குறித்த விடயத்தில் வடபுலத்துத் தமிழரசுத் தமிழர்கள் அமைதி காத்தார்கள்.

இக்காலப்பகுதியில் சாதியத்துக்கு எதிரான எழுச்சி வடக்கில் சாதியத்தால் ஒடுக்கப்பட்ட மக்களது வரலாற்று முக்கியமான ஒரு போராட்டமாக விரிவுகண்டது. அதைத் தமிழரசுக் கட்சி எதிர்த்து இழிவு செய்தது. சீனாவின் கலாசாரப் புரட்சியையும் சாதியத்திற்கு எதிரான போராட்டத்தையும் ஒரே தளத்தில் வைத்து இரண்டையும் அவதூறு செய்தது. இன்னொருபடி மேல் சென்று வடபுலத்தில் ஒடுக்கப்பட்ட மக்களின் நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து மேற்கொள்ளப்பட்ட போராட்டங்களை அரசாங்கம் பொலிஸாரின் துணையுடன் முழுமையாக அடக்கவேண்டும் என்று தமிழரசுக் கட்சி வேண்டுகோள் விடுத்தது.

சாதியத்துக்கு எதிரான போராட்டங்களை தமிழரசுக் கட்சித் தலைவர்கள் மோசமாக நிந்தித்துப் பேசினர். அதில் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் முதன்மையானவர். ஆனால் இந்த நிந்தனைப் பேச்சுக்களை நிறுத்தவோ, கண்டிக்கவோ செல்வநாயகம் முனையவில்லை. இதை அவரிடம் எதிர்பார்க்க முடியாது என்பது இங்கு இன்னொரு நிகழ்வை சுட்டிக்காட்டல் தகும். 1950களில் தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் தாங்கள் பௌத்த மதத்தைத் தழுவுவதாகத் தெரிவித்தபோது அவர் 'இந்த கம்யூனிச சதியை வன்மையாகக் கண்டிப்பதாக' சொன்னார். அந்தக் கூற்றில் இயலாமையும், விடயங்களை ஆழவிளங்காமல் யார் மீதாவது பழிபோடும் நோக்கமே இருந்தது என்பது வெளிப்படை.

செல்வநாயகம் பெரும்பான்மையான பங்குகளைக் கொண்டிருந்த சுதந்திரன் ஏடு குறித்த மதமாற்றத்தைக் கடுமையாகத் தாக்கியது. இதைத் 'தமிழினத் துரோகம்', 'சிங்கள பௌத்தத்திடம் சரணாகதி' என்றெல்லாம் வர்ணித்தது. ஒடுக்கப்பட்ட மக்கள் ஏன் இவ்வாறு ஒரு முடிவை எடுத்தார்கள் என்று சிந்தித்துப் பார்க்கக் கூட சாதிய அகங்காரம் இடமளிக்கவில்லை.

செல்வநாயகத்தின் சாதிய நிலைப்பாடு பற்றிப் பேசுகின்ற போதெல்லாம் அவர் கிறிஸ்தவர் என்ற வாதம் வைக்கப்படுவதுண்டு. இங்கு இன்னொரு நிகழ்வை சொல்லியாக வேண்டும். அறுபதுகளின் நடுப்பகுதியில் இளவாலையில் அமைந்துள்ள பெரிய தேவாலயமான பரிசுத்த அன்னம்மாள் ஆலயத்தில் திருமண வைபவத்திற்குப் பயன்படுத்தப்படும் 'முட்டு' என்ற இருக்கையை தாழ்த்தப்பட்ட மக்கள் சமத்துவமாகப் பயன்படுத்த முயன்றபோது கிறிஸ்தவ சாதியாதிக்க வாதிகளும்; சாதி வெறியர்களும் அம் மக்கள் மீது தாக்குதல்கள் தொடுத்தனர். அதேபோல் 'காணிக்கைப்' பொருட்கள் செலுத்துவதிலும், திருச்சொரூபத்தைத் தூக்குவதிலும் சாதி அடிப்படையில் தாழ்த்தப்பட்ட மக்கள் புறக்கணிக்கப்பட்டனர். இப் புறகணிப்பையும் மீறி திருச்சொரூபத்தை தாழ்த்தப்பட்ட மக்கள் தூக்க முற்பட்டபோது சாதிவெறியர்கள் பொலிஸாரை வைத்துத் தாக்கினர். அவ் ஆலயத்தில் சாதி தீண்டாமையை ஒழித்து தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சமத்துவத்தை வழங்க கத்தோலிக்கத் திருச்சபையோ ஆயரோ தயாராக இருக்கவில்லை. உயர்சாதியினருக்கு இடையூறு ஏற்படா வண்ணம் தாழ்த்தப்பட்டவர்களும் ஏனைய இடைநிலைச் சாதியினரும் வணங்கும் வகையில் இளவாலை மக்குவிலில் யூதா சத்தேயூ ஆலயம் கட்டப்பட்டது. அதன் பின் கோடாலிக் காடு பகுதியில் சதா சகாய மாதா ஆலயம் தனியே தாழ்த்தப்பட்ட மக்களுக்கானதாகக் கட்டப்பட்டது. இத்தகைய நடவடிக்கைகள் கிறிஸ்தவ மதமும் சாதியத்திற்கு விலக்கல்ல என்பதைக் காட்டியது.

1977ம் ஆண்டுவரை தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த ஒருவரைத் தேர்தலில் நிறுத்த தமிழரசுக்கட்சியோ தமிழ்க் காங்கிஸரோ தயாராக இருக்கவில்லை. 1977இல் தேர்தலில் இடதுசாரிகள் வெற்றிபெற்றுவிடக் கூடாது என்பதற்காக மட்டுமே தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவருக்கு இடம் வழங்கப்பட்டது. அதன் பின்னரும் கூட தமிழரசுக் கட்சியினதோ அதன் வழிவந்த தமிழர் விடுதலைக் கூட்டணியினதோ அரசியல் என்பது உயர்வர்க்க நலன் காக்கும் அரசியலாகவே இருந்து வந்தது. 1977இல் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த ரி. இராஜலிங்கம் பாராளுமன்றம் சென்றபிறகு தாழ்த்தப்பட்ட சமூகத்தில் இருந்து அடுத்த பாராளுமன்ற உறுப்பினர் தெரிவானது 2004ம் ஆண்டே இந்த இடைவெளி வலுவான செய்தியொன்றைச் சொல்கிறது. தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் பாராளுமன்ற உறுப்பினர்களான வந்தமையால் தமிழரசுக் கட்சியிடம் சாதியம் ஒழிந்துவிடவுமில்லை, குறைந்துவிடவும் இல்லை.

சாதியத்திற்கு எதிரான போராட்டத்திற்கு எதிராக சாதியவாதிகள் பக்கம் சார்ந்து தமிழரசுக் கட்சித் தலைவர்கள் இப்போராட்டத்தை முறியடிக்கக் கடுமையாக முயன்றனர். சாதியத்திற்கு எதிரான போராட்டம் தமிழரசுக் கட்சியினதும் மூத்த தமிழ் தலைவர்கள் எனப்பட்டோரினதும் உயர் சாதியச் சிந்தனையை அப்பட்டமாக தோலுரித்துக் காட்டியமையும் ஒரு முக்கியமான அரசியல் வெற்றியாகும். பொது இடங்களில் வெளிப்படையாகச் சாதிப் பாகுபாடு காட்டுவதற்கு முடிவு கட்டுவதில் அந்தப் போராட்டம் பெரும் பங்களித்தது என்பது பலரும் அறிந்தது. எனினும் அப்போராட்டத்தின் தாக்கங்கள் வேறு பரிமாணங்களையும் கொண்டிருந்தன.

தமிழரின் பிரதிநிதிகளாக அதிகாரக் கதிரைகளை அலங்கரிப்போர் தாழ்த்தப்பட்ட மக்களின் அடிப்படைப் பிரச்சனைகளையே கண்டுகொண்டது கிடையாது. தாழ்த்தப்பட்ட சமூகத்தின் நிலம், குடியிருப்பு, கல்வி, சுகாதாரம் போன்ற அடிப்படை உரிமைகளுக்கே மிகக் கடுமையாகப் போராட வேண்டியிருந்தது. அந்நிலை இன்றும் தொடர்கிறது. அவ்வுரிமைகளை உறுதிசெய்ய தமிழ்த்தலைமைகள் பயனுள்ள பங்களிப்பு எதையும் ஆற்றவில்லை என்பதே வரலாறு சொல்கிற செய்தி. இன்று வடபுலத்தில் சாதியம் நவீன முறையில் அரங்கேறுகிறது. சாதியம் தகராமல் இருப்பதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பு உயர்சாதிய அரசியல் தலைமைகளுக்குடையது.



## வாழ்வியல் தரிசனம்

எடுத்தெறிந்து பேசுவது மமதையின் வெளிப்பாடு என்றே சொல்ல வேண்டும். விதண்டாவாதத்துடன் எவருக்கும் பணியாமல், தாங்கள் சொல்வது மட்டுமே சரியானது எனப் பேசுபவர்களை, எவருமே விரும்பமாட்டார்கள்.

எமது நடை, உடை, பாவனை, பேசும் முறை போன்றவற்றை, சுற்றி இருப்பவர்கள், எப்பொழுதும் அவதானித்துக் கொண்டே இருப்பார்கள். கண்ணியமாக நடந்து கொள்வபர்களேயே சமூகம் விரும்புகின்றது.

எவ்வளவு பெரும் அந்தஸ்தும் கல்விப் புலமையும் இருப்பவர்களின் நடத்தையிலும் குணத்திலும் கோணல் புத்தி இருந்தால், அவர்களிடம் இருந்து மற்றையோர் விலகிப்போய் விடுவார்கள்.

நெஞ்சத்தில் மாசு இன்றி, கலகலப்பாக, நகைச்சுவை உணர்வோடு, ஆணவச் செருக்கு அற்றவர்களை, விரும்பாதவர்கள் எவருமே இல்லை.

வெறுப்பு குரோதங்களை வளர்ப்பது சுலபமானது. சாந்தம், அமைதி, எளிமையுடன் வாழ்வதற்கு, ஆன்ம சுத்தி அவசியமானது. இதற்கு மனோ சக்தி பிரதானமானது.

நல்லன எதுவெனப் பலருக்கும் தெரியும். ஆனால், அவற்றைக் கடைப்பிடிக்க முயற்சி செய்ய வேண்டும். இது சிரமமானது அல்ல!

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### எமக்கான காணிகளை பெற்று தாருங்கள்



200 வருட கால வரலாற்றை கொண்டு வாழ்ந்து வரும் மலையக மக்களுக்கு இன்று வரை தமக்கான காணி உரிமை வீட்டு உரிமை வழங்கப்படவில்லை.

மேலதிக வருமானத்தை பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் விவசாயம் கால்நடை வளர்ப்பு போன்றவற்றிற்கு சொந்தமாக ஒரு பேர்ச் காணி கூட இல்லாத நிலையிலேயே மலையாக மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இவ்வாறான நிலையில் தமக்கு சொந்தமாக சொந்த நிலத்தில் வாழக்கூடிய வகையில் காணிகளை வழங்கி அதற்கான உறுதி பத்திரத்தையும் வழங்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

தமக்கென சொந்தமாக காணி, நிலம் கூட இல்லாத நிலையில் ஒரு வாடகைக்கு அமர்த்தப்பட்ட மக்களாகவே வாழ்க்கையை நடத்தி வருவதாகவும், நாட்டில் ஏனைய சமூகத்தவர்களுக்கு சொந்தமாக பல ஏக்கர் காணிகள் வழங்கப்படுகின்ற போதிலும் மலையக மக்கள் மாத்திரம் இன்று வரை புறக்கணிக்கப்பட்டு வருவது ஏன் என கேள்வி எழுப்புகின்றனர்.

நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பு மலையக மக்கள் என அரசியல் பிரமுகர்கள் மேடைகளில் பேசியபோதிலும் அந்த முதுகெலும்பை வாழ வைப்பதற்கு தேவையான சொந்த காணிகளை இன்று வரை பெற்றுக் கொடுக்கவில்லையே என்ற ஆதங்கத்தை வெளிப்படுத்தினர்.

சுஜிதா

TAGS விருதுகள் 2023 இல்

# ஆர்பிகோ இன்சூரன்ஸ் பிஎல்சி விருது சுவீகரிப்பு




பரந்தளவில் அறியப்படும் மற்றும் நாட்டின் மிகவும் புத்தாக்கமானதும், நம்பிக்கையை வென்றதுமான ஆயுள் காப்புறுதி சேவை வழங்குநரான ஆர்பிகோ இன்சூரன்ஸ் பிஎல்சி, காப்புறுதித் துறையில் சிறந்த வருடாந்த நிதி அறிக்கைக்கான (ரூ. 10 பில்லியன் வரை GWP) வெண்கல விருதை சுவீகரித்திருந்தது. TAGS விருதுகள் 2023 நிகழ்வில் தொடர்ச்சியான இரண்டாவது வருடமாகவும் இந்த விருதை ஆர்பிகோ இன்சூரன்ஸ் பிஎல்சி தனதாக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை பட்டய கணக்காளர் நிறுவகத்தினால் (CA ஸ்ரீ லங்கா) ஏற்பாடு செய்யப்பட்ட TAGS விருதுகள், வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல், ஆளுகை மற்றும் நிலைபேறாண்மை ஆகியவற்றை பொருளாகக் கொண்டுள்ளது. நிதி, சூழல், சமூக மற்றும் ஆளுகை அறிக்கையிடல் ஆகியவற்றுக்காக கௌரவிக்கப்பட்ட ஆர்பிகோ இன்சூரன்ஸ் பிஎல்சியின் 2022 ஆம் ஆண்டின் நிதி அறிக்கை, 'Strides for Multifaceted Growth' எனும் தலைப்பில் வெளியிடப்பட்டிருந்தது.

நிதிசார், நிதிசார் அறிக்கையிடல் அம்சங்களை உள்வாங்கி சிறந்த வருடாந்த நிதி அறிக்கைகளை வெளியிட்டிருந்தமைக்காக CA ஸ்ரீ லங்காவினால் கௌரவிக்கப்பட்ட பல முன்னணி கூட்டாண்மை, பல்தேசிய, சிறிய நடுத்தரளவு தொழில் முயற்சிகள் மற்றும் இலாப நோக்கற்ற நிறுவனங்களில் ஆர்பிகோ இன்சூரன்ஸ் பிஎல்சியும் உள்ளடங்கியிருந்தது. ஆர்பிகோ இன்சூரன்ஸ் பிஎல்சியின் தவிசாளர் ரமல் ஜாசிங்க கருத்துத் தெரிவிக்கையில், "ஒழுங்குபடுத்தல் தேவைகளை பின்பற்றுகின்றமைக்காக எமது முயற்சிகள் கௌரவிக்கப்பட்டு வெகுமதியளிக்கப்பட்டுள்ளமையை காண்பதையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். அதனூடாக எமது ஒழுக்கமான, ஆளுகை, சூழல் மற்றும் இதர அர்ப்பணிப்புகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன." என்றார்.

ஆர்பிகோ இன்சூரன்ஸ் பிஎல்சியின் பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி கலாநிதி. கெலும் சேனநாயக்க கருத்துத் தெரிவிக்கையில், "நேர்மை மற்றும் வெற்றிகரமான செயற்பாடு ஆகியவற்றில் எமது நிறுவனத்தின் தொடர்ச்சியான அர்ப்பணிப்புக்கு இந்த சாதனை சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. இந்த பெருமைக்குரிய விருதை சுவீகரித்த தொடர்ச்சியான இரண்டாவது வருடமாக இது அமைந்துள்ளதுடன், ஒன்றிணைப்பு, சிறப்பு மற்றும் நாம் முன்னெடுக்கும் ஒவ்வொரு படிகளிலும் கைகோர்ப்பு போன்ற எமது பிரதான பெறுமதிகளில் நாம் காண்பிக்கும் ஒப்பற்ற அர்ப்பணிப்பை வெளிப்படுத்துவதாகவும் அமைந்துள்ளது. எமது அணியினரின் அர்ப்பணிப்பான மற்றும் கடுமையான உழைப்பினால் இந்த கௌரவிப்பை எய்த முடிந்தது." என்றார்.

ஆர்பிகோ இன்சூரன்ஸ் பிஎல்சியின் நிதிக் கட்டுப்பாட்டாளர் எஸ்.எச். துல்ஞ்ஜித் கவீஷ கருத்துத் தெரிவிக்கையில், "எமது 2022 ஆம் ஆண்டின் வருடாந்த நிதி அறிக்கை இந்த பெருமைக்குரிய விருதுகள் வழங்கும் நிகழ்வில் கௌரவிப்பைப் பெற்றுள்ளமையை காண்பதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். வெறும் இலக்கங்களுக்கு அப்பால் இந்த கௌரவிப்பு நீடிக்கப்பட்டுள்ளதுடன், எமது நிறுவனம் முழுவதிலும் முன்னெடுக்கப்படும் ESG கட்டமைப்பில் காண்பிக்கும் ஒப்பற்ற அர்ப்பணிப்பை வெளிப்படுத்துவதாகவும் அமைந்துள்ளது. இந்த ESG கொள்கைகளுக்காக அர்ப்பணிப்பு என்பது CA ஸ்ரீ லங்காவில் மதிப்பாய்வு செயன்முறையில் பிரதான அங்கமாக அமைந்திருப்பதுடன், எமது முயற்சிகளில் முக்கியத்துவத்தை மேலும் உணர்த்துவதாக அமைந்துள்ளது." என்றார்.

காப்புறுதி பரவலாக்கத்தின் சிறந்த மூலோபாயங்களுக்காகவும் ஆர்பிகோ இன்சூரன்ஸ் பிஎல்சி அண்மையில் கௌரவிக்கப்பட்டிருந்தது. இந்தியாவில் இந்திய வர்த்தக சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற 4ஆவது வளர்ந்து வரும் ஆசிய காப்புறுதி மாநாடு மற்றும் விருதுகள் 2023 நிகழ்வில் இந்த கௌரவிப்பு வழங்கப்பட்டிருந்தது.

SLT டிஜிட்டல் சேர்விசஸினால்

# பாடசாலை சமூகமளிப்பு அறிவித்தல் கட்டமைப்பு அறிமுகம்



SLT-MOBITEL இன் வளர்ந்து வரும் டிஜிட்டல் ஈடுபாட்டு பிரிவான SLT டிஜிட்டல் சேர்விசஸ், தனது புத்தாக்கமான பாடசாலை சமூகமளிப்பு அறிவித்தல் கட்டமைப்பை அறிமுகம் செய்துள்ளதாக அறிவித்துள்ளது. சூழல், சமூகம் மற்றும் ஆளுகை (ESG) ஆகிய கொள்கைகளுக்கான நிறுவனத்தின் அர்ப்பணிப்பின் பிரகாரம் இந்தத் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. கல்வித் துறையில் சிறுவர் பாதுகாப்பு மற்றும் டிஜிட்டல் மாற்றியமைப்பு ஆகியவற்றை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தி இந்த அறிமுகம் அமைந்துள்ளது.

இந்த புத்தாக்கமான திட்டத்தின் பிரதான இலக்கு என்பது, மாணவர் வரவை கண்காணித்தல் மற்றும் செம்மையாக்கல், துல்லியத்தன்மையை உறுதி செய்தல், வினைத்திறனுடன், சிறுவர்களின் பாதுகாப்பை மேம்படுத்தல் போன்றவற்றில் கவனம் செலுத்துவதாக அமைந்துள்ளது. பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்கள் மற்றும் பேருந்துகள் போன்ற மாணவர்கள் பயணிக்கும் பல்வேறு பகுதிகளில் அவர்களின் வரவை அடையாளப்படுத்தும் வகையில் இந்தக் கட்டமைப்பு அமைந்துள்ளதுடன், உடனடியாக பெற்றோருக்கு அவர்களின் மொபைல் சாதனங்களினூடாக அறிவிக்கப்படும்.

இந்த நவீன கட்டமைப்பினூடாக சிறுவர்களின் பாதுகாப்பு மேம்படுத்தப்படுவது மாத்திரமன்றி, பெற்றோருக்கு உடனுக்குடன் தமது பிள்ளைகளின் பாடசாலை சமூகமளிப்பு அடங்கலான தகவல்களை அறிந்து கொள்ளக்கூடியதாக அமைந்துள்ளது. அங்கீகாரம் பெற்ற நபர்களால் வகுப்பு வரவு தொடர்பான தகவல்களை அணுக முடியும் என்பதால், ஆசிரியர்களாலும் இதனை இலகுவாக உறுதி செய்து கொள்ளலாம். இந்த கட்டமைப்பானது பிரத்தியேகமான உயிரியல் கட்டமைப்பு மற்றும் RFID சாதனங்களினூடாக செயற்படுத்தப்படுகின்றது.

அநுராதபுரம் நிவத்தக சேத்திய தேசிய கல்லூரியில் இந்தத் திட்டத்தின் பரீட்சார்த்த அறிமுகம் நிறுவப்பட்டுள்ளது. தரவு சேகரிப்பு மற்றும் கல்வி அமைச்சின் அனுமதியைப் பெற்று, பாடசாலைகளுடன் இணைந்து இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

கல்வி அமைச்சின் டிஜிட்டல் மாற்றியமைப்பு செயற்பாடுகளுக்கு ஆதரவளிப்பதற்கு SLT டிஜிட்டல் சேவைகள் தன்னை அர்ப்பணித்துள்ளது. சிறுவர் பாதுகாப்பு மேம்பாட்டில் விசேட கவனம் செலுத்துவதாக இந்தத் திட்டம் அமைந்துள்ளது.

SLT டிஜிட்டல் சேவைகள் பிரதம நிறைவேற்று அதிகாரி உபுல் மஞ்சநாயக்க கருத்துத் தெரிவிக்கையில், "மென்பொருள் மற்றும் அப்ளிகேஷன் வடிவமைப்பு பங்காளரான Future Network Holding Private Limited உடன் கைகோர்த்து, தனியார் மற்றும் பொது பாடசாலைகளுக்கு இந்த பிரத்தியேகமான மாணவர் வரவு பதிவு மற்றும் அறிவித்தல் கட்டமைப்பை அறிமுகம் செய்வதற்கு SLT Digital Services முன்வந்திருந்தது. பாடசாலைகளுக்கான இணைய அப்ளிகேஷனை உள்ளடக்கியதாக இந்த சேவை அமைந்திருப்பதுடன், பாடசாலைகளுக்கு எவ்வித செலவுமின்றி வழங்கப்படும். மேலும், பெற்றோருக்கு இந்த சேவையை Android மற்றும் iOS app களினூடாக பெற முடியும். டேட்டா மற்றும் ஹோஸ்டிங் செலவுகளை ஈடு செய்வதற்காக குறைந்த கட்டணத்தில் வழங்கப்படுகின்றது. பாடசாலைகள் தடங்கலில்லாத மற்றும் தொடர்ச்சியான சேவையை பெற்றுக் கொள்வதை உறுதி செய்யும் வகையில் அவசியமான சாதனங்கள் மற்றும் பராமரிப்பு சேவைகள் போன்றனவும் வழங்கப்படும்." என்றார்.

# குறும்பாக்கள்!



வாக்குக்கேட்டு வந்ததொரு முகம்
வந்தபின் கேட்டது நம் சுகம்
ஊக்குவிப்போம் உம்மையென
உளறிவிட்டுச் சென்றதன்பின்
நாக்குரைத்த வார்த்தை பல விசம்......

சொறிவதற்கு சுகமானது முதுகு
சுயமானம் எதுவுமில்லை வளைவு
அறிவிருந்தும் பயனில்லை
ஆக்கங்கள் வேறு தொல்லை
'மறிமந்தை' இனம் பார்த்துப் பழகு......

வெட்டரிவாள் சுமக்குமொரு முதுகு
வீரமில்லை அதுவுனக்கு உணரு
பட்டப்பகலில் எங்கும்
பாவிரக்கம் பாராது
சட்டெனச் சங்கரிப்பதோவுன் மரபு?......

வெள்ளத்தின் நடுவே வேட்பாளர்
விழாமலிருக்க அவரருகே காப்பாளர்
கள்ளச் சிரிப்போடு
காட்சிக்கு ஒரு படமெடுக்க
உள்ளக்கடுப்போடு முன்னால்
ஊர்க்காரர்......

சத்தில்லை உடல்வாகு ஒல்லி
சாராயம் அனுதினமும் மண்டி
வெத்திலைவாய் சகிதம்
வேலைக்குப் புறப்பட்டால்
கத்தியபடி வருமுடம்பு நொண்டி.

- அலெக்ஸ் பரந்தாமன்
புதுக்குடியிருப்பு

# கானல் காதல்



அந்தகாரத்தில் ஒரு மின்மினி
புயலில் துளிர்க்கும் பயிர்
நம் காதல்.

தொடாமல் தொட்ட
விடாமல் விட்ட
பந்தம்

ஆழியில் மேவும் அலையும்
மணல் காயும் கரையும்
நீயும் நானும்

நிஜத்தில் யாரோவாய்
நினைவில் எல்லாமாய்
தீராக் காதல்
அருவி

# மரம்...முகில்

தினம் ஓடி ஓய்ந்த முகில்கள்
அடர்ந்த மலையின்
கம்பீர மரங்களிடம்
கதைக்கேட்டன.

நாங்கள் பூமிக்கும்
வானளாவிய பரப்பிற்கும்
உல்லாசமாக இருக்கிறோம்.

நீ மட்டும் உன் வாழ்நாள் முழுவதும்
ஒரே இடத்தில் இருக்கிறாய்...
உனக்கு பிடித்திருக்கின்றதா
இந்த வாழ்க்கை ?
என்றது முகில்.

மரம் தன் சலனம் விட்டு,
நீ உன் வளர்ச்சிக்காக
வானுயர செல்கிறாய்...

சற்றென்று மழையாய்
பொழிந்து மண்ணோடு
நேசம் கொண்டாய் மீண்டும்
நீராவியாகி விண்ணை அடைவாய்...




ஆனால் என்னிடத்தே அன்றாட
தேவைக்கு மனிதன், பட்சியினங்கள்
நிரந்தரமாக என் இருப்பிடம்
வருவது என் பலனை பெறுவது
அதனை நான் காண்பது சந்தோசமே...

ஓர் இடத்தே இருந்து தானும்
வளர்ந்து பிறரையும் வளர
வைப்பதே உண்மையான
வளர்ச்சி என்றது மரம்...
முகில் தன்னிலை உணர்ந்து
அந்தி சாய்ந்தது.

வியாத்தன்



# நிழலாய் நீயே





தோழனாய் நின்று
தோழிற்
தாங்கினாய்
ஆலகால
நஞ்சுண்ட
ஆதி சிவன் நீயாகி
எமைக்காக்க வந்தாய்
ஆழியிடை முத்தாய்
அரும் பெருஞ் சொத்தாய்
பெருந்தவப் பயனாய்
வந்துதித்தாய்
தாய் மாமனாய்

முக வாட்டங் கண்டும்
குரற்றழும்பல் கண்டும்
கண்டறிவாய் நிலைமையை
அறிவுரையில் ஆசானாய்
அன்பினில் வள்ளலாய்
ஆளுமையில் அறிஞராய்

மொத்தத்தில் எம் ஐவருக்கும்
அரசனாய்
தாலாட்டக்கூட கேட்டோம்
தவப்பயனால்

பள்ளி வாயிலில்
வழி மேல் விழியது
உன் வருகை தேடி
துள்ளித் திரிந்ததெல்லாம்
உன் தோள் தாவி

முதல் எழுத்து
மணல் மேல் எழுதியதும்
உன்விரற் பிடியில்
தலை மேல் எழுத்து மட்டும்
உன் நினைவுகளுடன்
மட்டுமே வாழ...

குகதா
கிளிநொச்சி

# IORA தினம் 2024

வெளிவிவகார அமைச்சு மற்றும் கல்வி அமைச்சு ஆகியன இணைந்து பாடசாலை மாணவர்களுக்காக IORA தினம் 2024 நிகழ்வை மார்ச் மாதம் ஏற்பாடு செய்துள்ளன. இதில், இந்து சமுத்திரத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் மாணவர்களுக்கான ஓவியப் போட்டி உள்ளடங்கியிருக்கும்.

2023/2025 காலப்பகுதிக்கான, இந்து சமுத்திர ரிம் சம்மேளனத்தின் (IORA) தலைமைத்துவப் பொறுப்பை 2023 ஒக்டோபர் மாதம் இலங்கை ஏற்றிருந்தது. IORAஇல் 23 அங்கத்துவ நாடுகளும், பதினொரு கலந்துரையாடல் பங்காளர்களும் அடங்கியுள்ளன.

IORA தினத்துக்கான தொனிப்பொருள் 'எதிர்கால தலைமுறையினருக்கு நிலைபேறான இந்து சமுத்திரம்" என்பதாக அமைந்திருப்பதுடன், எதிர்காலத் தலைமுறையினருக்கு சமுத்திர பாதுகாப்பு மற்றும் நிலைபேறான செயன்முறைகள் போன்றவற்றின் முக்கியத்துவம் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் ஈடுபாட்டு செயற்பாடுகளில் அதிகளவு கவனம் செலுத்தும்.

திட்டமிடப்பட்ட செயற்பாடுகளில், கல்வி அமைச்சும் விஜய பத்திரிகை ஸ்தாபனமும் இணைந்து மாணவர்களுக்கான தேசிய மட்ட ஓவியப் போட்டியை நடத்துகிறது.

பாடசாலை மாணவர்களிடமிருந்து மூன்று பிரிவுகளில் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் – ஆரம்ப நிலை (தரம் 1 – 5), கனிஷ்ட நிலை (தரம் 6 – 9) மற்றும் சிரேஷ்ட நிலை (தரம் 10 – 13). விஜய பத்திரிகை ஸ்தாபனத்தின் சிறுவர் பிரசுரங்கள் மற்றும் ஒன்லைன் தளங்களில் மேலதிக தகவல்கள் வெளியாகும்.

சமுத்திர நிலைபேறாண்மையின் முக்கியத்துவம் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், நாடளாவிய ரீதியில் சிறுவர்களின் பங்கேற்புடன் பல்வேறு சமுத்திரம் சார்ந்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும். இலங்கை கடற்படை மற்றும் இதர சமுத்திரசார் முகவர் அமைப்புகளின் ஒழுங்கமைப்பில் இந்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும். மாணவர்களுக்கான குறுகிய காலப்பகுதி கடல் விஜயங்களுக்கான வாய்ப்புகளும் வழங்கப்படும்.

IORA தினத்துக்கு முன்னதாக பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் திட்டமிடப்பட்டுள்ளன.

IORA தினம் 2024இன் பிரதான நிகழ்வு கொழும்பில் கடல் முகப்புப் பகுதியில் மார்ச் 10ஆம் திகதி முன்னெடுக்கப்படும் என்பதுடன், சமுத்திரத்துடன் தொடர்புடைய செயற்பாடுகளை விளக்கும் காட்சிகூடங்களையும் கொண்டிருக்கும்.

# IORA தின ஓவியப்போட்டி 2024





**"எதிர்கால சந்ததியினர்களுக்காக நிலையான இந்து சமுத்திரம்"**

- இலங்கை, இந்து சமுத்திரத்தை அண்மித்த நாடுகளின்அ மைப்பான, IORA அமைப்பின் தலைமைத்துவத்தை தற்போது வகிப்பதுடன், 2024 ஆம் ஆண்டிற்கான IORA தினத்தை 2024 மார்ச் மாதம் 10ஆம் திகதி கொழும்பில் நடாத்துவதற்கு திட்டமிட்டுள்ளது.
- இது தொடர்பான நடவடிக்கைகளின் ஒருபகுதியாக, கல்வி அமைச்சு மற்றும் விஜய பத்திரிரகை என்பவற்றுடன் இணைந்து "எதிர்கால சந்ததியினர்களுக்காக நிலைபேறான இந்து சமுத்திரம்" என்ற தொனிப்பொருளின் கீழ் பல்வேறு தலைப்புகளில் பாடசாலை மாணவர்களிடையே நாடளாவிய ரீதியில் ஓவியப்போட்டி ஒன்றை நடாத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## நாடளாவிய ரீதியில் வளர்ந்து வரும் அனைத்து கலைஞர்களையும் அழைக்கிறோம் !

நமது அழகிய இந்து சமுத்திரத்தை பாதுகாப்பதை மையமாகக் கொண்டு தமது படைப்பாற்றலையும் ஆர்வத்தையும் வெளிப்படுத்துமாறு நாட்டிலுள்ள அனைத்து பாடசாலை மாணவ, மாணவியரை அன்புடன் அழைக்கிறோம்!





## பங்கேற்பு

பங்கேற்பதற்கான முறைகள் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன:



**ஆரம்பபிரிவு (1–5 தரங்கள்)**
தலைப்பு : "எமது சமுத்திரம் - எமது வாழ்க்கை"
(பங்கேற்பதற்கான சான்றிதழ்கள் / பரிசுகள் வழங்கப்படும்)



**கனிஷ்ட பிரிவு (6–9 தரங்கள்)**
தலைப்பு : "நமது சமுத்திரத்தை பாதுகாப்போம்"
(பங்கேற்பதற்கான சான்றிதழ்கள் / பரிசுகள் வழங்கப்படும்)



**சிரேஷ்ட பிரிவு (10–13 தரங்கள்)**
தலைப்பு : "எதிர்கால சந்ததியினருக்காக நிலையான இந்து சமுத்திரம்"
(பங்கேற்பதற்கான சான்றிதழ்கள் / பரிசுகள் வழங்கப்படும்)



**வெற்றி பெறும் மற்றும் தேர்ந்தெடுக்கப்படும் கலைப்படைப்புக்கள் 2024 மார்ச் 10 திகதி கொழும்பில் நடாத்தப்படும் IORA கலைகண்காட்சியில் காட்சிப்படுத்தப்படும்.**



**அதிக பார்வையாளர்கள் மத்தியில் உங்களுடையத திறமைகளை வெளிப்படுத்தி உங்கள் செய்தியைப் பரப்புங்கள்.**



**உங்கள் கலைப்படைப்புக்கள் மூலம் நிலைப்பேறானத் தன்மைக்காக குரல் கொடுப்பவராகுங்கள், நேர்மையான மாற்றத்தை ஏற்படுத்துங்கள்**



## நிபந்தனைகள்

- இலங்கையிலுள்ள அனைத்து பாடசாலை மாணவர்களும் பங்குற்றலாம்
- A3 அளவான காகிதம் பயன்படுத்தப்பட வேண்டும்
- அனைத்து ஆக்கங்களும் பாடசாலை அதிபரால் சான்றளிக்கப்பட்டு கீழே தரப்பட்டுள்ள விண்ணப்பப் படிவமொன்றுடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும்.

## ஆக்கங்ளை ஒப்படைத்தல்

உங்கள் கலைப்படைப்புக்களை பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் 2024 பெப்ரவரி 16ஆம் திகதிக்கு முன்னதாக கிடைக்கக்கூடிய வகையில் கீழே உள்ள முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கவும்.

**பணிப்பாளர் (அழகியற்கல்வி) கல்வி அமைச்சு**

**இசுருபாய, பெலவத்தை பத்தரமுல்ல**

தபால் உறையின் இடது பக்கத்தில் மேல் மூலையில் பின்வரும் விபரங்களை குறிப்பிடவும்

**IORA தின ஓவியப்போட்டி 2024**
பிரிவு :..........................................
மாகாணம் :....................................

தெரிவு செய்யப்பட்ட கலைப்படைப்புகள் உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் நடாத்தப்படும் எதிர்க்கால நிகழ்ச்சிகளுக்கும் பயன்படுத்தப்படும். வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, கல்வி அமைச்சு மற்றும் விஜய பத்திரிகை என்பவற்றால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## IORA தின ஓவியப் போட்டி 2024
## விண்ணப்பப்படிவம்

**முழுப் பெயர்** :..........................................................................................

**பிரிவு** : ஆரம்ப (1-5 தரங்கள்) ☐ கனிஷ்ட (6-9 தரங்கள்) ☐ சிரேஷ்ட (10-13 தரங்கள்) ☐

**பாடசாலை** :..........................................................................................

**மாகாணம்** :..........................................................................................

**வீட்டு முகவரி** :..........................................................................................

**பெற்றோர் / பாதுகாவலரின் பெயர்** :..........................................................................

**பெற்றோர் / பாதுகாவலரின் தொலைபேசி இலக்கம்** :..................................................

**அதிபரின் சான்றிதழ் :**


மேற்படி மாணவர் இந்த பாடசாலையில் ........................... தரத்தில் கல்வி பயின்று வருகிறார் என சான்றளிக்கிறேன்.

..................................................
அதிபரின் கையொப்பம்

பொலிஸ் செய்திகளின்

# ஆக்கிரமிப்பும் அச்சுறுத்தலும்

உலகளாவிய ரீதியில் அடுத்த இரண்டு ஆண்டுகளில் எதிர்பார்க்கப்படும் பாரதூரமான அச்சுறுத்தலாகவும் சர்வதேச மற்றும் உள்நாட்டு, சமூக மற்றும் அரசியல் பிளவுகளை மேலும் விரிவுபடுத்துவதற்கு ஏதுவான காரணியாகவும் தவறான தகவல் பகிர்வு (*Misinformation and Disinformation* )மற்றும் பொலிஸ் செய்தியின் (*Fakenews*) பரவல் காணப்படும் என நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.




உலகப் பொருளாதார மன்றத்தின் 2024 ஆண்டுக்கான உலகளாவிய இடர் அறிக்கைக்காக மேற்கொள்ளப்பட்ட ஆய்வு தொடர்பில் நிபுணர்களின் கூற்றுப்படி, தேர்தல்களுக்கான முன்னோடியில்லாத ஆண்டில், உலகெங்கிலும் உள்ள மக்கள் எதிர்கொள்ளும் முக்கிய அச்சுறுத்தல்களில் ஒன்றாக தவறான தகவல் (*False Information*) காணப்படும் என தெரிவிக்கின்றனர். பொருளாதார, சுற்றுச்சூழல், புவிசார் அரசியல், சமூக மற்றும் தொழில்நுட்ப அபாயங்கள் உள்ளிட்ட 34 காரணிகளை உள்ளடக்கிய தரவரிசையின் அடிப்படையில், அடுத்த இரண்டு ஆண்டுகளில் பகுப்பாய்வு செய்யப்பட்ட நாடுகளின் தெரிவுகளில், தவறான தகவல் பகிர்வு மற்றும் பொலிஸ் செய்தியின் பரவல் முதன்மை அச்சுறுத்தலாக இருக்கும் என சுட்டிக்காட்டப்படுகின்றது.

உலகளாவிய அபாயங்கள், குறுகிய கால மற்றும் நீண்ட கால தீவிரத்தன்மையின் அடிப்படையில் தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் குறுகிய கால அச்சுறுத்தல்களை அடுத்த இரண்டு ஆண்டுகளில் ஏற்படும் அச்சுறுத்தல்கள் என்ற அடிப்படையில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றில் தவறான தகவல் பகிர்வு மற்றும் பொலிஸ்செய்திகளின் அச்சுறுத்தல் என்ற விடயம் முதன்மைப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கு அடுத்த அச்சுறுத்தல்களாக மோசமான வானிலை நிகழ்வுகள், சமூக துருவமயப்படுத்துதல், சைபர் பாதுகாப்பின்மை, பிராந்தியங்களுக்கு இடையேயான ஆயுத மோதல் , பொருளாதார வாய்ப்பின்மை, பணவீக்கம், தன்னிச்சையான இடம்பெயர்வு, பொருளாதார வீழ்ச்சி, சூழல் மாசு ஆகிய காரணிகளும் முக்கியம் பெறுகின்றன.

அதேபோல் நீண்டகால அச்சுறுத்தல்கள் என்ற அடிப்படையில் மோசமான வானிலை நிகழ்வுகள், புவியியல் அமைப்புசார் முக்கியமான மாற்றங்கள், பல்லுயிர் இழப்பு மற்றும் சுற்றுச்சூழல் சீர்குலைவு, இயற்கை வளங்களின் பற்றாக்குறை, தவறான தகவல் மற்றும் பொலிஸ்செய்திகளின் பரவல், *AI* தொழில்நுட்பங்களின் எதிர்மறையான விளைவுகள், தன்னிச்சையான இடம்பெயர்வு, இணைய பாதுகாப்பற்ற தன்மை, சமூக துருவமயப்படுத்துதல் மற்றும் சூழல் மாசுபாடு என்பன தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

இவற்றில் பொலிஸ்செய்தி மற்றும் தவறான தகவல்கள் அதிகமாக பரவும் நாடாக இந்தியா அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து இடர்களிலும் தவறான தகவல் மற்றும் பொலிஸ்செய்திகளின் ஆக்கிரமிப்பானது, தொற்று நோய்கள், சட்டவிரோத பொருளாதார நடவடிக்கைகள், சமத்துவமின்மை மற்றும் தொழிலாளர் பற்றாக்குறை ஆகியவற்றை விடவும் முதன்மையாகக் கருதப்படும் அச்சுறுத்தலாக மாறியுள்ளதாக நிபுணர்களால் சுட்டிக்காட்டப்படுகின்றது. சுமார் 1.4 பில்லியன் மக்கள் வசிக்கும் இந்தியாவில் அடுத்த பொதுத் தேர்தல் 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் மே மாதம் வரை நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த 2019ஆம் ஆண்டு தேர்தலின் போதும் பொலிஸ் செய்திகள், தவறாத தகவல் பகிர்வுகள் என்பன மிகப்பெரிய தாக்கத்தை செலுத்தியுள்ளதாக சுட்டிக்காட்டும் நிபுணர்கள் இம்முறையும் தேர்தல் காலங்களில் மிக மோசமான வன்முறைகள் வரையில் இதன் தாக்கங்கள் இருக்கும் என தெரிவிக்கின்றனர்.

அதேபோல், *Anchor Change Election Cycle Tracker* மற்றும் *Statista* இன் கூடுதல் ஆய்வறிக்கையின்படி, 2024 உலகளவில் 60க்கும் மேற்பட்ட நாடுகளில் தேசியத் தேர்தல்களை மக்கள் எதிர்கொள்கின்றனர். சுமார் 2 பில்லியன் வாக்காளர்கள் - அண்ணளவாக உலக மக்கள்தொகையில் கால் பகுதியினர் இந்த ஆண்டு வாக்களிக்கவுள்ளதாக எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கமைய 2024 ஆம் ஆண்டானது சூப்பர் தேர்தல் ஆண்டு அல்லது வரலாற்றில் மிகப்பெரிய தேர்தல் ஆண்டு என்று அழைக்கப்படுவதாக தெரிவித்துள்ளதுடன், முக்கியமாக அமெரிக்கா, மெக்சிகோ, இந்தியா மற்றும் இந்தோனேசியா போன்ற அதிக மக்கள் தொகை கொண்ட நாடுகளில் இந்த ஆண்டு தேர்தல் நடைபெறவுள்ளதாகத் தெரிவித்துள்ளனர். ஆகவே இந்த நாடுகளில் பொலிஸ் செய்தி மற்றும் தவறான தகவல் பரவலை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளனர். இலங்கை மக்களும் இந்த ஆண்டில் தேர்தலை எதிர்கொள்ளவுள்ளனர். இவ்வாறான பின்னணியில் பொலிஸ்செய்திகளின் பரவல் மற்றும் தவறான செய்தி பகிர்வு என்பன இலங்கைக்கும் பாரிய அச்சுறுத்தலாகவே காணப்படுகின்றது.

மேலும் எல் சால்வடோர், சவுதி அரேபியா, பாக்கிஸ்தான், ருமேனியா, அயர்லாந்து, செக்கியா, அமெரிக்கா, சியரா லியோன், பிரான்ஸ், ஐக்கிய இராச்சியம் மற்றும் பின்லாந்து ஆகிய நாடுகள் தவறான தகவல் மற்றும் பொலிஸ் செய்திகளின் தாக்கங்களின் அதிக ஆபத்தை எதிர்கொள்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. அடுத்த இரண்டு ஆண்டுகளில் நாடு எதிர்கொள்ளும் 34 அபாயங்களில் மிக மோசமான ஆபத்துகளில் முதன்மையாக இந்த பொலிஸ் செய்தியின் பரவல் இருக்கும் எனவும், நீண்டகால அச்சுறுத்தல்களில் முதல் நான்கு அல்லது ஆறு இடங்களுக்குள் பொலிஸ் செய்தியின் தாக்கம் இருக்கும் எனவும் உலகப் பொருளாதார மன்றம் சுட்டிக்காட்டுகின்றது.

உலகப் பொருளாதார மன்ற ஆய்வாளர்கள் கருத்துப்படி: "இந்த தேர்தல் செயல்முறைகளில் தவறான தகவல்களும் பொலிஸ் செய்திகளும் அதிகளவில் இருப்பதால், புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கங்களின் உண்மையான மற்றும் உணரப்பட்ட சட்டபூர்வமான தன்மையை தீவிரமாக சீர்குலைக்கும், அரசியல் அமைதியின்மை, வன்முறை மற்றும் பயங்கரவாதம் மற்றும் ஜனநாயக செயல்முறைகளின் நீண்டகால பின்னடைவு ஆகியவற்றை அபாயப்படுத்தலாம்." எனத் தெரிவிக்கின்றனர்.

தேர்தல்களுக்கு அப்பால், பொது சுகாதாரம் முதல் சமூக நீதி வரையிலான பிரச்சினைகள் குறித்த பொது உரையாடலில் இந்த போசமான தன்மை ஊடுருவி, யதார்த்தத்தின் உணர்வுகள் மேலும் துருவப்படுத்தப்படுவதுவதாக தெரிவிக்கப்படுகின்றது. இருப்பினும், உண்மை குறைமதிப்பிற்கு உட்படுத்தப்படுவதால், உள்நாட்டு பிரச்சாரம் மற்றும் தணிக்கையின் ஆபத்தும் அதிகரிக்கும். தவறான மற்றும் போலியான தகவல்களுக்கு பதிலளிக்கும் விதமாக, அரசாங்கங்கள் "உண்மை" என்று தீர்மானிப்பதன் அடிப்படையில் தகவல்களைக் கட்டுப்படுத்த அதிக அதிகாரம் அளிக்கப்படலாம். இணையம், பத்திரிகை மற்றும் பரந்த தகவல் ஆதாரங்களுக்கான அணுகல் தொடர்பான சுதந்திரங்கள், ஏற்கனவே வீழ்ச்சியடைந்துள்ளதால், பரந்த அளவிலான நாடுகளில் தகவல் முடக்கம் என்ற கோட்பாடு மேலோங்குவதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

இலங்கையை எடுத்துக்கொண்டாலும் தற்போது அரசாங்கம் கொண்டுவந்துள்ள நிகழ்நிலை காப்புச்சட்டத்தின் பாய்ச்சலானது ஜனநாயக வரம்புகளை மீறிச்செல்வதுடன் கருத்து வெளிப்பாட்டு சுதந்திரம் ஆகியவற்றையும் மிக மோசமாக பாதிக்கும் என நிபுணர்களால் எச்சரிக்கப்பட்டு வருகின்றது. எனினும் பொலிஸ்செய்திகள், தவறான தகவல் பகிர்வின் விளைவுகளும் இதில் தாக்கம் செலுத்தி வருகின்றது என்பதையும் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

இலங்கையில் பொலிஸ்செய்திகளின் உண்மைத்தன்மையை கண்டறிவதிலும், தவறான தகவல் பகிர்வுகள் தொடர்பில் தெளிவுபடுத்துவதிலும், தரவு சரிபார்த்தல் போன்ற விடயங்களில் பணியாற்றும் இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் *factseeker* தொடர்ச்சியாக செயற்பட்டு வருவதுடன், இலங்கையில் வேறு சில நிறுவனங்களும் இதனை முன்னெடுத்து வருகின்றன.

# கலைஞர் சுவதம் விருது

அம்பாறை மாவட்டத்தில் இடம்பெற்ற இலக்கிய விழாவின் போது காரைதீவைச் சேர்ந்த தாதிய உத்தியோகத்தர் இளம் கவிஞர் மனோகரன் சசிப்பிரியனுக்கு (விபுலசசி) கலைஞர் சுவதம் விருதினை அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக அபேவிக்கிரமவினால் வழங்கி வைக்கப்பட்டது.

வி.ரி.சகாதேவராஜா




## யாழ் மாவட்ட பண்பாடு விழா



வட மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரனையுடன் யாழ்ப்பாண மாவட்ட பண்பாட்டு பேரவையும், மாவட்ட செயலகமும் இணைந்து ஏற்பாடு செய்த யாழ்.மாவட்ட பண்பாட்டு விழா அண்மையில் இடம்பெற்றது. இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் கலந்து சிறப்பித்துள்ளார்.

இந்நிகழ்வின் போது பண்பாட்டு ஊர்வலத்துடன் அதிதிகள் அரங்கிற்கு அழைத்து செல்லப்பட்டு கலை நிகழ்வுகள் அரங்கேற்றப்பட்டதுடன், கலைஞர்களும் கௌரவிக்கப்பட்டனர்.










## வருடாந்த பட்டமளிப்பு விழா

முன்பள்ளியில் இருந்து தரம் 01 இற்கு செல்லவிருக்கும் மாணவர்களின் விடுகை மற்றும் புதிய முன்பள்ளி மாணவர்களை வரவேற்கும் நிகழ்வுகள் சாய்ந்தமருது அல்-ஜலால் வித்தியாலயத்தின் அதிபர் எம்.ஐ.எம். சைபுதீன் தலைமையில் இடம்பெற்றுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக "றியோ மார்க்கட்டிங்" நிறுவனத்தின் "கிவி" உற்பத்திப்பிரிவின் முகாமையாளர் றுமைஸ் கலந்து கொண்டுள்ளார்.

எஸ்.அஷ்ரப்கான்











## அசானிக்கு ஆசீர்வாதம்...

Zee தமிழ் சரிகமப நிகழ்ச்சியில் கலந்துக்கொண்டு புகழ்பெற்ற புசல்லாவை நயப்பன தோட்டத்தை சேர்ந்த அசானிக்கான ஆசீர்வாத பூஜையும் வரவேற்பு நிகழ்வும் கண்டி- பன்விலை ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலய வருடாந்த தேர்த் திருவிழா உற்சவத்தின் போது இடம்பெற்றது.

மெய்யன்









## உபகரணங்கள் வழங்கிவைப்பு

உலக உணவு திட்டத்தின் அனுசரனையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேச செயலகப் பிரிவில் உள்ள விவசாயிகளுக்கு தமது தொழிலை மேம்படுத்துவதற்கான உபகரணங்கள் வழங்கும் நிகழ்வுகள் புதன்கிழமை (31) இடம்பெற்றுள்ளது.

கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தவின் பங்குபற்றுதலுடன் சுமார் 07 பயனாளிகளுக்கான உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன.

எம்.எஸ்.எம். நூர்தீன்

## மாணவர்களை கௌரவிப்பு

புலமைப் பரிசில் பரீட்சை மற்றும் சாதாரண தரப் பரீட்சையில் (2023/ 2024) திறமைச்சித்திகளைப் பெற்றுக்கொண்ட நாவலப்பிட்டிய கேம்ரிட்ஜ் வித்தியாலய மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலையின் அதிபர் எம்.எம். பரீட் தலைமையில் நடைபெற்றது.

ஏ.எம்.ஜலீல்





## 161 ஆவது நினைவு தின நிகழ்வு

ராமஞ்ன மகா நிகாயே 161 ஆவது நினைவு தின நிகழ்வு இரத்தினபுரி மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் திங்கட்கிழமை (29) இடம்பெற்றது. இதன்போது சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவின் திசாநாயக்கவின் சம்புத்த சாசனத்திற்கும் மனித சமூதாயத்திற்கும் ஆற்றிய சிறந்த சேவையை கவனத்திற்கொண்டு ஸ்ரீ லங்கா ராமஞ்ன மகா நிகாயே அதி மகாநாயக்க அங்கமஹா பண்டித மகுலேவே விமல மாநாயக்க தேரர் தலைமையில் “தேச கீர்த்தி ஸ்ரீ சாசனாபிமானி” விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது

சிவா ஸ்ரீதரராவ்










## பன்னாகமென்னும் மாத்தளை மாநகரின் கண்ணென எழுந்தருளியிருக்கும்

# அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன்




கலாநிதி ஜயகுமார் ஷான்
(ஆசிரியர் (SLTS, NDIL, CHR, BED)
மலையக இந்துக்கோவில்
வரலாற்று ஆய்வாளர்



இலங்காபுரியின் மத்திய ஸ்தானத்தில், சைவமும் தமிழும் தழைத்தோங்க நிற்கும் மாத்தளை மாநகர் பன்னாகமம் பகுதியல் உருவத்திருமேனி கொண்டு திவ்ய சிம்மாசனத்தில் எழுந்தருளியிருக்கும் அருள் மிகு ஸ்ரீ முத்துமாரியம்மாளுக்கு, நிகழும் மங்களகரமான சோபகிருது வருடம் மாசி மாதம் 12ம் நாள் (2024.02.24) சனிக்கிழமை காலை மக நட்சத்திரத்தில் இரதோற்சவம் இடம்பெறவுள்ளது. அத்துடன், மாசி மாதம் 14ம் நாள் (2024.02.26) திங்கட்கிழமை காலை தீர்தோற்சவமும் இரவு துவஜாஅவரோகனமும் (கொடியிறக்கமும்) நடத்தத் திருவருள் கூடியிருக்கிறது.

### கிரியாகால நிகழ்வுகள்

2024.02.23 வெள்ளிக்கிழமை காலை 7.00 மணிக்ககு, சுடுகங்கை ஸ்ரீ ஏழுமுகக் காளியம்மன் கோவிலிருந்து காவடி ஊர்வலம் புறப்படும். மு.ப. 10.00 மணிக்குத் தீ மிதிப்பும் மு.ப 11.00 மணிக்கு ஸ்ரீ சிவனடியார் திருவிழாவும், வசந்த மண்டப பூஜையும் பி.ப 1.00 மணிக்கு மகேஸ்வர பூஜையும் இடம்பெறும். அன்றிரவு திருசூரகத் திருவேட்டைத் திருவிழாவும் இடம்பெறும்.

2024.02.24 சனிக்கிழமை காலை 7.00 மணிக்கு இரதோற்சவம், வசந்தமண்டப பூஜை இடம்பெறும். 2024.02.25 ஞாயிற்றுக்கிழமை மாலை 7.00 மணிக்கு கற்பூரத்திருவிழா இடம்பெறும். 2024.02.26 திங்கட்கிழமை காலை 8.00 மணிக்கு பாற்குடபவனியும் மு.ப 10 மணிக்குத் தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

2024.02.27 செவ்வாய்கிழமை மு.ப 11.00 மணிக்கு ஸ்ரீ சண்டேஸ்வர உற்சவமும் மாலை 6.00 மணிக்கு பூங்காவன உற்சவமும் இடம்பெறும்.

தேர் தினத்தன்று ஸ்ரீ பஞ்சமுக விநாயகர், ஸ்ரீ வள்ளி - தெய்வானை சமேத சண்முகர், ஸ்ரீ சிவனம்பாள், ஸ்ரீ முத்துமாரியம்மன், ஸ்ரீ சண்டேஸ்வரி ஆகிய மூர்த்திகள் சர்வலங்கார அதிவிசித்திர வினோதமான பஞ்சரதங்களிலே ஆரோகணிக்கப்பட்டு நகர் வீதி உலா நடைபெறும் .

கோவில் அமைவிடம் இயற்க்கை எழில் தவழ்ந்து விளையாடும் மத்திய மலைநாட்டிலே, கண்டியிலிருந்து சுமார் 30 கிலோமீற்றர் தொலைவில் மூவின மக்களும் வாழும் மாத்தளை எனும் மாநகரின் மத்தியிலே, ஆகாயத்தை எட்டிபிடிக்கும் வண்ணம், தென்னிந்திய கலைப்பானியிலே சிற்ப வேலைப்பாடுகளுடன் கம்பீரத் தோற்றத்தோடு, 108 அடியில் நிமிர்ந்த நடையில் இராஜகோபுரத்துடன் ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் அமைந்துள்ளது.



### கோவிலும் வரலாறும்

இலங்கைத் திருநாட்டின் சைவம் தழைத்தோங்கும் வகையில், தன்னிகரல்லாக் கோவிலாகத் திகழும் கோவில்களில் மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவிலும் திகழ்கின்றது என்றால் அது மிகையாகாது. பஞ்ச இரதங்களை கொண்டுள்ள ஒரேயொரு கோவில் இதுவாகும். இதுவே இலங்கையின் மிக உயரமான (108 அடிகள் ) இராஜகோபுரத்தைக் கொண்ட கோவிலுமாகும். இக்கோவிலில் ஆரம்பக் காலத்தின் பூஜைகள் மட்டுமே இடம்பெற்று வந்துள்ளன. பின்னர் படிப்படியாக திருவிழாக்களும் சப்பரத் தேர் எடுக்கும் வழக்கமும் இருந்தது 1934 ஆம் ஆண்டு சப்பரத்தை மாற்றி விநாயகருக்கும் சிவனம்பாளுக்கும் முருகனுக்கும் இரதோற்சவம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. அதேபோன்று 1955 ஆம் ஆண்டளவில் இராஜகோபுரம் உட்பட்ட பல அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. பொதுமக்களின் உதவியுடன் கோவிலின் மஹா மண்டபம் உட்பட முருகன் கோவில், வசந்த மண்டபம், விஷ்னு கோவில், நாயன்மார் கோவில், மீனாட்சி, சிவன் கோவில்கள் உருவாக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து ஸ்ரீ முத்துமாரி அம்பாளுக்குச் சந்தன மரத்தில் சித்திரத் தேர் செய்யப்பட்டு 1977 ஆம் ஆண்டு வெள்ளோட்டம் விடப்பட்டது. 1983 ஆம் ஆண்டு ஏற்பட்ட இனக்கலவரத்தின் போது சில விசமிகளால் சித்திரத் தேர் உட்பட அனைத்துத் தேர்களும் தீயால் எரியூட்டப்பட்டன பிறகு 1992 ஆம் ஆண்டளவில் புதிய சித்திரத் தேர் தேரையும் ஏனையத்





தேர்களையும் செய்யும் பணி ஆரம்பிக்கப்பட்டு வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டதென்பது குறிபிடத்தக்கது.

மேலும் இக்கோவிலில் அமைந்துள்ள 108 அடிகள் உயரமுள்ள இராஜ கோபுரமானது இந்துக்களின் ஒற்றுமையையும் திருப்பணியின் வளர்ச்சியையும் காட்டி நிற்கின்றது என்றால் அது மிகையாகாது.

### மூர்த்தி, தீர்த்தம்,தலவிருட்சம்

கருவறையில் கம்பீரத் தோற்றத்திலே, திவ்ய சிம்மாசனத்தில் அம்பாள் அமர்ந்து நாடிவரும் பக்தர்களுக்கு அருளாசி வழங்குகிறாள் தீர்த்தமாக கோவில் தீர்த்தக்கேணி அமைக்கப்பட்டுள்ளது. கோவிலின் தலவிருட்சம் பல வருடங்களாக கோவிலுக்குள்ளே மிகவும் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.

இக்கோவிலே பல்வேறு திருவிழாக்கள் இனிதே நடைபெற்று இந்து சமயத்தின் பாரம்பரியங்களையும் கலை கலாசாரங்களையும் தத்துவங்களையும் பேணி பாதுகாத்து வருகின்றமை குறிபிடத்தக்கது அந்த வகையில் ஆடிப் பெருந்திருவிழா தை மாதப்பிரமோற்சவம், மாசி மகம், நவராத்திரி, பௌர்ணமிச் செவ்வாய், மிக விஷேடமாக சிவராத்திரி, குடமுழுக்குப் பூஜைகள், விளக்குப் பூஜை, ஐயப்ப பூஜைகள் என்பன இடம்பெறுகின்றன. அத்தோடு வெள்ளி, செவ்வாய் போன்ற விஷேட தினங்களிலே, அம்பாளுக்குச் சிறப்பு அபிஷேக ஆராதனைகள் இடம்பெறுகின்றன. இக்காலங்களிலே பத்தர்களின் கூட்டம் கடலென திரண்டு, அம்பாளின் அருளாசிக்கு அலைமோதுவது விஷேட அம்சமாகும்.

### கோவிலின் சமூகப் பணி

இக்கோவிலில், இன்னோரன்ன சமூகப் பணிகளை மேற்கொண்டு, பிரதேச வாழ் மக்களின் அபிவிருதிக்குத் துணை நிற்கின்றமை குறிபிடத்தக்கது. அந்த வகையில் ஞாயிற்றுக்கிழமைகள் தோறும் அறநெறி வகுப்புக்கள் இடம்பெறுவது மாணவர்களுக்கு தர்மம், இந்து சமயம் தொடர்பான விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் நிகழ்ச்சி திட்டங்கள் போன்ற பல பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இக்கோவிலில் அமைந்துள்ள 108 அடிகள் உயரமான இராஜ கோபுரம், இந்துக்களின் ஒற்றுமையையும் திருப்பணியின் வளர்ச்சியையும் காட்டி நிற்கின்றது

இலங்கைத் திருநாட்டின் சைவத்தைத் தழைத்தோங்கச் செய்யும் கோவில்களில் ஒன்றான இக்கோவில் பஞ்ச இரதங்களைக் கொண்டுள்ளமை சிறப்பம்சம் ஆகும்.

உத்தர பிரதேசம்

# ஞானவாபி மசூதியில் பூஜை செய்ய அனுமதி

உத்தர பிரதேச மாநிலம் வாரணாசியில் காசி விஸ்வநாதர் கோவிலுக்கு அருகே ஞானவாபி மசூதி இருக்கிறது. அந்த மசூதி, கோவிலை இடித்துக் கட்டப்பட்டிருப்பதாகவும், அதை மீண்டும் இந்துக்களிடம் வழிபாட்டுக்காக ஒப்படைக்க வேண்டும் என்றும் வாரணாசி நீதிமன்றம் மற்றும் அலகாபாத் உயர் நீதிமன்றில் வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. இதை எதிர்த்து இஸ்லாமியர்கள் தரப்பில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. மசூதி இருக்கும் இடம் கோவிலின் ஒரு பகுதி என்று இந்துக்கள் தரப்பில் வாதம் முன்வைக்கப்படுகிறது.

இந்நிலையில், வாரணாசியில் உள்ள ஞானவாபி மசூதியின் தெற்கு பகுதியில் இந்துக்கள் பூஜை நடத்த வாரணாசி நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. வழிபாடு நடத்துவதற்கான பூசாரியை நியமிக்கவும் காசி விஸ்வநாதர் கோவில் அறக்கட்டளைக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



இந்து தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் அடுத்த 7 நாட்களுக்குள் பூஜை நடத்தப்படும் என நீதிமன்றத்தில் தகவல் தெரிவித்துள்ளார். வாரணாசி நீதிமன்ற உத்தரவை எதிர்த்து மேல்முறையீடு செய்யப்போவதாக ஞானவாபி மசூதி நிர்வாகம் தகவல் தெரிவித்துள்ளது.

தெலுங்கானா

# ஓட்டோவில் பூந்தோட்டம்

தெலுங்கானா மாநிலம், மெகபூபாபாத்தை சேர்ந்தவர் அஞ்சி. இவர் சொந்தமாக ஓட்டோ ஓட்டி வருகிறார்.

வாகன பெருக்கத்தின் காரணமாக சுற்றுச்சூழல் மாசு அடைவதால் வித்தியாசமாக ஏதாவது செய்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என விரும்பினார்.

அதன்படி அஞ்சு தனது ஓட்டோவின் மேற்கூரையில் வித்தியாசமான முறையில் பல்வேறு பூச்செடிகளை நட்டு நகரும் தோட்டம் அமைத்துள்ளார்.

வித்தியாசமான முறையில் ஓட்டோ மீது பூந்தோட்டம் அமைத்துள்ளதை அப்பகுதி மக்கள் அதிசயமாக பார்க்கின்றனர். மேலும் அவரது ஓட்டோவில் உள்பகுதியில் மின்விசிறியும் பொருத்தியுள்ளார். இவரது ஓட்டோ மீது பூச்செடிகள் வளர்ந்துள்ளதால் ஓட்டோவில் உள்பகுதியில் குளுமையாக உள்ளது.



அஞ்சுவின் ஓட்டோவில் பயணிக்கும் பயணிகளுக்கு வெப்பம் தெரியாமல் சில்லென்ற காற்று வீசுவதால் பயணிகள் இவரது ஓட்டோவில் பயணிக்க ஆர்வம் காட்டுகின்றனர்.

அஞ்சுக்கு அதிக அளவில் சவாரி கிடைப்பதால் கணிசமான அளவில் வருமானம் ஈட்டி வருகிறார். தற்போது கோடை காலம் தொடங்க உள்ள நிலையில் அஞ்சுவின் ஓட்டோவில் பயணிக்க பொதுமக்கள் அதிக அளவில் ஆர்வம் காட்டுவார்கள் என கூறப்படுகிறது.

பாராளுமன்ற பாதுகாப்பு மீறல்

# குற்றவாளிகள் பகீர் குற்றச்சாட்டு

பாராளுமன்ற தாக்குதல் தினமான டிசெம்பர் 13ம் திகதி, பலத்த பாதுகாப்பையும் மீறி மக்களவைக்குள் நுழைந்து புகைக் குப்பிகளை (கேனிஸ்டர்) வீசிய இருவர் கைது செய்யப்பட்டனர். அதேபோல், பாராளுமன்றத்திற்கு வெளியே புகை குப்பிகளை வீசி கோஷங்கள் எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்ட இருவர் கைது செய்யப்பட்டனர். அவர்களுடன் தொடர்புடைய மேலும் இருவர் கைது செய்யப்பட்டனர்.

விசாரணையின்போது பொலிஸார் எங்களை மிகவும் துன்புறுத்தினர். 70 வெற்று பேப்பர்களில் கையெழுத்துபோடும்படி கட்டாயப்படுத்தினர். உபா சட்டப்பிரிவு மற்றும் தேசிய அரசியல் கட்சிகளுடன் தொடர்பு ஆகிய குற்றங்களை ஒப்புக்கொண்டு கையெழுத்திடும்படி சித்திரவதை செய்தனர். மின்சார அதிர்ச்சியும் கொடுத்தனர் என்றும் நீதிமன்றத்தில் அவர்கள் தெரிவித்தனர்.

மலேசியா

# 17-வது மன்னராக பதவியேற்ற சுல்தான் இஸ்கந்தர்

மலேசியாவின் 17-வது மன்னராக சுல்தான் இப்ராஹிம் சுல்தான் இஸ்கந்தர் பதவியேற்றார்.

மலேசியா நாட்டின் அதிகாரப்பூர்வமாக பிரதமர் இருந்தாலும், அங்கு இன்னும் மன்னர் அதிகாரம் நீடித்து வருகிறது. இந்நிலையில், தற்போது சுல்தான் இப்ராஹிம் இஸ்கந்தர் மலேசியாவின் 17வது மன்னராக புதன்கிழமை (31) பொறுப்பேற்றுக்கொண்டுள்ளார்.

இந்நிலையில், இவரும் இவரது குடும்பமும் சிங்கப்பூரில் தொலைத்தொடர்பு உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்களில் முதலீடுகளை கொண்டிருக்கிறது. இதன் மதிப்பு ரூ.47 ஆயிரம் கோடி என தெரிவிக்கப்பட்டுள்ளது.



மலாய்-பிரிட்டிஷ் வம்சாவளியைச் சேர்ந்த சுல்தான் இப்ராஹிம், மலேசியாவில் தனியார் இராணுவம் ஒன்றையும் வழிநடத்துகிறார்.

இந்தநிலையில், தான் பதவியேற்றுக்கொண்டது குறித்து கூறிய அவர், “நான் அரசாங்கத்தை ஆதரிப்பேன், ஆனால் அவர்கள் தவறாக ஏதாவது செய்கிறார்கள் என்று நினைத்தால் அது குறித்து எச்சரிப்பேன்” என்று கூறியுள்ளார்.

அமெரிக்கா

# மன்னிப்பு கேட்ட மார்க்

உலகின் முன்னணி சமுக வலைதளமான இன்ஸ்டாகிராம் மற்றும் மெட்டா நிறுவனர், மார்க் ஜுக்கர்பெர்க்.

சமூக வலைதளங்களில் வெளியாகும் உள்ளடக்கங்களால் குழந்தைகளுக்கு ஏற்படும் தாக்கம்,குழந்தைகள் மீதான தாக்குதல் சம்பந்தமான வீடியோக்கள் குறித்து அந்நிறுவனங்களின் மீது பலர் தெரிவிக்கும் குற்றச்சாட்டுகளின் மீது அமெரிக்க செனட் புதன்கிழமை (31) விசாரணை நடத்தியது.

இதில் மார்க் நேரில் பங்கேற்று தனது தரப்பு வாதங்களை முன்வைத்தார். குடியரசு கட்சியின் செனட்டர் ஜோஷ் ஹாவ்லி , மார்க் நோக்கி, “உங்கள் வலைதள உள்ளடக்கங்களால் பாதிக்கப்பட்டவர்களிடம் மன்னிப்பு கேட்பீர்களா” என கேட்டார்.

அப்போது, ஜுக்கர்பெர்க் எழுந்து நின்று கொண்டு அக்குடும்பத்தினரை நோக்கி பேசினார்.

அவர்களிடம் அவர் தெரிவித்ததாவது:

“நீங்கள் அனைவரும் அனுபவித்த கொடுமையான துன்பங்களுக்கு நான் வருந்துகிறேன். உங்கள் குடும்பங்கள் அனுபவித்த துயரங்கள் வேறு எவருக்கும் வர கூடாது. என்னை மன்னியுங்கள்.” என தெரிவித்தார்.

சமூக வலைதளங்களில் வெளியிடப்படும் உள்ளடக்கங்களை கட்டுப்படுத்த ஒரு சட்டம் வரையறுக்கப்பட வேண்டும் என நீண்ட நாட்களாக அமெரிக்க அரசு முயன்று வருகிறது குறிப்பிடத்தக்கது.



# ரஷ்யா- உக்ரேன் இடையே போர்க்கைதிகள் பரிமாற்றம்

ரஷ்யாவும், உக்ரேனும் தங்களிடையே நூற்றுக்கணக்கான போர்க்கைதிகளை புதன்கிழமை (31) பரிமாறிக் கொண்டன.

சுமார் 65 உக்ரேன் போர்க்கைதிகளுடன் பறந்துகொண்டிருந்த தங்களது ரஷ்ய இராணுவ விமானம் சுட்டுவீழ்த்தப்பட்டதால் ஒரு வார தாமதத்துக்குப் பிறகு இந்த நல்லெண்ண நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது குறித்து ரஷ்ய பாதுகாப்புத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

“ரஷ்யாவிடம் இருந்த 195 உக்ரேன் போர்க்கைதிகள் அவர்களது தாய் நாட்டிடம் ஒப்படைக்கப்பட்டனர். அதற்குப் பதிலாக, அதே எண்ணிக்கையிலான ரஷ்ய போர்க்கைதிகள் எங்களிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டனர்” என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை எதிர் ஆப்கானிஸ்தான்:

# இன்று ஆரம்பிக்கிறது ஒற்றை டெஸ்ட்

இலங்கை, ஆப்கானிஸ்தான் அணிகளுக்கு இடையிலான ஒற்றை டெஸ்ட் போட்டியானது கொழும்பு எஸ்.எஸ்.சி மைதானத்தில் இன்று காலை 10 மணிக்கு ஆரம்பிக்கிறது.

ரஷீட் கான் இல்லாதது ஆப்கானிஸ்தானுக்கு இழப்பாயினும் குவைஸ் அஹ்மட் அவரது இழப்பை ஓரளவுக்கு நிவர்த்தி செய்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

மறுபக்கமாக அணித்தலைவர் ஹஷ்மத்துல்லாஹ் ஷகிடி, ரஹ்மத் ஷா, இப்ராஹிம் ஸட்ரான் ஆகியோரையே துடுப்பாட்டத்தில் ஆப்கானிஸ்தான் பெரிதும் நம்பியுள்ளது.

இலங்கையணியைப் பொறுத்த வரையில் மிகப் பலமானதாகவே காட்சியளிக்கிறது. குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய வகையில் பின்னடைவுகள் எதையும் கொண்டிருக்கவில்லை.



ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடர் இன்று ஆரம்பம்:

# அவுஸ்திரேலியாவுக்கு அதிர்ச்சியளிக்குமா மே. தீவுகள்?

அவுஸ்திரேலிய, மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரானது, மெல்பேர்ணில் இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ள போட்டியுடன் ஆரம்பிக்கிறது.

மேற்கிந்தியத் தீவுகளின் அணித்தலைவர் ஷே ஹோப் மாத்திரமே அவ்வணியில் நம்பிக்கையளிக்கக் கூடியவராகக் காணப்படுகின்றார். எனினும் அண்மைய போட்டிகளில் மிகச் சிறப்பாகச் செயற்படும் அவர் தனித்தே போட்டியை வெல்லக்கூடிய திறமையைக் கொண்டிருக்கிறார்.

மறுபக்கமாக அணித்தலைவர் பற் கமின்ஸ், மிற்செல் ஸ்டார்க், ஜொஷ் ஹேசில்வூட், மிற்செல் மார்ஷ், கிளென் மக்ஸ்வெல், மார்க்கஸ் ஸ்டொய்னிஸ், டேவிட் வோர்னர் இல்லாத நிலையில் வேகப்பந்துவீச்சாளர்கள் லான்ஸ் மொரிஸ், ஸ்கெவியர் பார்ட்லெட் மற்றும் துடுப்பாட்ட வீரர் ஜேக் பிறேஸர்-மக்குர்க் போன்றோருக்கு இத்தொடர் நிரூபிப்பதற்கான வாய்பாகக் காணப்படுகின்றது.





# இந்தியாவை மீண்டும் வெல்லுமா இங்கிலாந்து?

இந்திய, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியானது விசாகப்பட்டினத்தில் இன்று காலை 9.30 மணிக்கு ஆரம்பிக்கிறது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியில் இந்தியாவை வென்றுள்ள இங்கிலாந்து இரண்டாவது போட்டியிலும் சவாலை அளிப்பதற்கு ஒலி போப்பின் இனிங்ஸ் போன்றதொரு இனிங்ஸை மீண்டும் பெற வேண்டியுள்ளது.

இந்திய அணியைப் பொறுத்தவரையில் காயமடைந்த லோகேஷ் ராகுல், இரவீந்திர ஜடேஜாவை ராஜாட் பட்டிடார், குல்தீப் யாதவ் பிரதியிடுவதோடு மொஹமட் சிராஜ்ஜுக்குப் பதிலாக சஃப்ராஸ் கான் விளையாடக்கூடிய வாய்ப்புகளும் காணப்படுகின்றன.

மறுபக்கமாக காயத்திலிருந்து குணமடையாத இங்கிலாந்தின் ஜேக் லீச்சை அறிமுக சுழற்பந்துவீச்சாளர் ஷொய்ப் பஷிர் பிரதியிடுவதோடு, மார்க் வூட்டை ஜேம்ஸ் அன்டர்சன் பிரதியிடுகிறார்.

இங்கிலாந்து பிறீமியர் லீக்

# செல்சியை வீழ்த்திய லிவர்பூல்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், தமது மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற செல்சியுடனான போட்டியில் 4-1 என்ற கோல் கணக்கில் லிவர்பூல் வென்றது.

லிவர்பூல் சார்பாக, டியகோ ஜோட்டா, கோனர் பிராட்லே, டொமினிக் ஸொபொஸ்லாய், லூயிஸ் டயஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். செல்சி சார்பாகப் பெறப்பட்ட கோலை கிறிஸ்தோபர் என்குங்கு பெற்றார்.

பிறீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில் 51 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் லிவர்பூல் உள்ளது. 46 புள்ளிகளுடனுள்ளபோதும் கோலெண்ணிக்கை அடிப்படையில் இரண்டாம், மூன்றாமிடங்களில் நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றி மற்றும் ஆர்சனல் உள்ளன. தவிர, 43 புள்ளிகளுடனுள்ளபோதும் கோலெண்ணிக்கை காரணமாக நான்காமிடத்தில் டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பரும், ஐந்தாமிடத்தில் அஸ்டன் வில்லாவும் காணப்படுகின்றன. இதில் சிற்றி ஒரு போட்டி குறைவாக விளையாடியுள்ளது.



இலங்கை கிரிகட் சபையின் நடுவர் தரம் மூன்றுக்கு

# தரமுயர்வு பெற்றார் மூதூர் சிஹான் சுஹூட்

ஏ.எச் ஹஸ்பர்

இலங்கை கிரிக்கெட் நடுவர் தரம் மூன்றுக்கான தரமுயர்வு பரீட்சை, நேர்முகத்தேர்வு மற்றும் உடற்தகுதி சோதனை போன்றன கடந்தாண்டு பெப்ரவரி மாதம் முதல் ஒக்டோபர் மாதம் வரை இடம்பெற்றிருந்த அதேவேளை இத்தெரிவிற்காக இலங்கை கிரிகட் தரம் நான்கில் அங்கம் வகிக்கும் 162 நடுவர்கள் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.

மிகவும் போட்டியான மேற்படி நடுவர் தெரிவிற்கு இலங்கை கிரிக்கெட் சபையானது தேசிய ரீதியாக 25 நடுவர்களை மாத்திரம் மட்டுப்படுத்தியிருந்ததும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

அதற்கமைவாக திருகோணமலை மாவட்ட கிரிக்கட் சங்கத்தினூடாக மேற்படி தரமுயர்வில் பங்குபற்றிய மூதூரைச் சேர்ந்த சிஹான் சுஹூட் அவர்கள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண ரீதியில் முதலிடத்தையும், தேசிய ரீதியில் நான்காமிடத்தையும் தக்க வைத்ததன் மூலம் திருகோணமலை மாவட்ட கிரிக்கெட்டுக்கு பெருமை சேர்த்தது மட்டுமல்லாது திருகோணமலை மாவட்ட கிரிக்கெட் வரலாற்றில் முதலாவது தரம் மூன்று நடுவர் என்ற வரலாற்று ரீதியான சாதனையை படைத்துள்ளார்.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 02 பெப்ரவரி 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.